# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, ஆனி 26ஆ (9-7-72) ஞாயிறு 1391 ஜ: அல் 27 புத்தகம் 25 இதழ் 33


## ஈழத் தமிழர்களின் இன்றைய இலட்சியம்

# தனி நாடு!

## இதை நிறுவும் நிலை வரும்வரை இங்கிருந்தும் போராடுவோம்!

## பேரவையில் நவம் கர்ச்சனை!

"தமிழ் இலங்கையிலே வாழ்கின்ற 90 சதவீதத்துக்குமதிகமான தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களிடமிருந்து முற்ருகப் பிரிந்து தனிநாடு அமைக்க வேண்டும் என்ற கருத்துடையவர்களாக இன்று இருக்கிருர்கள். அப்படியொரு நிலையை யுத்த முனையிலே ஏற்படுததலாமேயொழிய வேறு ஏந்த வகையிலும் ஏற்படுத்த முடியாதென்பது எங்களுக்குத் தெரியும். ஆனுல் நாம் உடனடியாகப் போர் முனையிலே தனிநாடு பெறமுடியாது. நாம் தனிநாடு ஒன்றை நிலை நாட்டக்கூடிய நிலமையெய்தும்வரை இந்த அரசியல் சாசனத்தின் கீழ் இருந்துதான் இயங்கவேண்டிய நிலை இருக்கிறது. அதன் காரணமாகவே தமிழர் கூட்டணியினராகிய நாம் இங்கு வந்திருக்கிறேம். இந்த அரசியல் சட்டத்தை நாம் கடுமையாக எதிர்க்கிறேம் — என்றும் எதிர்ப்போம்."

—இவ்வாறு தேசியப் பேரவையில் முதன்முதலாக இம்மாதம் 4ம்திகதி பேசியசாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம் முழங்கினுர்.

திரு. நவரத்தினம் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"இந்த அரசியல் அமைப்புச் சாசனத்தை பூரணமாக எதிர்க்கின்ற தமிழ் மக்கள் இந்தச் சாசனத்தை நாம் என்றும் எதிர்ப்போம் — என்று சபதம் செய்கின்ற தமிழ் மக்கள் எந்த நிலையிலே நடந்து கொள்ள வேண்டும் என்று ஆலோசிக்க வேண்டிய நிலமை எங்களுக்கு ஏற்பட்டது.

தர்க்க ரீதியாகப் பார்க்கப்போனுல், இந்தச் சாசனத்தை நாங்கள் எதிர்க்கிறேம். உங்களுடைய அரசியல் சாசனம் எங்களைக் கட்டுப்படுத்தாதென்ற நிலையிலே நாம் இருக்கின்ற பொழுது தர்க்கரீதியாக நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டுமென்ருல், அந்த நேரத்திலே இனிமேல் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் அரசியல் ரீதியி

(4-ம் பக்கம் பார்க்க)



### காசி ஆனந்தன் சிறையில் இன்று 30 வது நாள்!

தமிழர் கூட்டணி இணைச்செயலாளர் கவிஞர் காசி ஆனந்தனும், வண்ணுர்பண்ணை தமிழர் வாலிப முன்னணிச் செயலாளர் வண்ணை ஆனந்தனும் வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டு இன்றுடன் 30 நாட்கள் முடிவடைகின்றன.

கவிஞர் கைதுசெய்யப்பட்டதற்கான காரணம் எதுவும் இன்னும் அரசாங்கத்தால் அறிவிக்கப்படவில்லை!

## ஆனந்தசங்கரி, இரத்தினம், தேவநாயகம் உரிமை முழக்கம்!

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை, தேசியப் பேரவையில் தமிழர் கூட்டணியைச் சேர்ந்த திருவாளர்கள் ஆனந்தசங்கரி, பண்டிதர் கா. பொ. இரத்தினம், கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் தமிழ் மக்களின் உணர்ச்சியை எடுத்துக்காட்டும் வகையில் உரிமை முழக்கமெழுப்பியுள்ளனர்.

இடியேறு போன்று முழங்கிய திரு. வி. ஆனந்தசங்கரி எழுபதுக்குமேற்பட்ட தமிழ் இளைஞர்கள் எதுவித காரணமுமின்றி சிறையிலடைக்கப்பட்டுள்ளதை வன்மையாகக்கண்டித்தார். துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்தார்கள் என்பதற்காக மூன்று தமிழ் மாணவர்கள்— உயர்கல்வி கற்றுக்கொண்டிருக்கவேண்டிய மாணவர்கள் — இன்று சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறுர்கள். ஆனுல் சிறிமாவோவின் பிள்ளைகளோ வெளிநாடுகளில் உல்லாசமாகப் படிக்கிறுர்கள். அதே துண்டுப் பிரசுரத்தை விநியோகித்த எங்களை ஏன் கைதுசெய்யவில்லை? என்று கேட்டார் திரு. ஆனந்தசங்கரி. 'சிமோல்' காங்கிரஸ்காரரையும் சாடு சாடென்று சாடினுர் அவர்.

தமிழுரிமை எப்படிப்பறிக்கப்படுகிறதென்பதை தகுந்த ஆதாரத்துடன் எடுத்துக்காட்டிப் பேசிய பண்டிதர் கா. பொ. இரத்தினம், 'பிரிவினைப்பாதையில் செல்லும்படி அரசாங்கமே எங்களைத் தள்ளிவிடுகிறது. இளைஞர்கள் துடித்துக் கொண்டிருக்கின்றனர். மூன்று மாதத்தில்தொடங்கவிருக்கும் விடுதலைப் போராட்டம் இறுதிப் போராட்டமாகவே அமையும். அதன் பயனுக இலங்கையும் ஒரு வியட்னுமாகவோ, ஒரு கொரியாவாகவோ, அயர்லாந்தாகவோ மாறிவிடலாம்' என்று எச்சரிக்கை விடுத்தார்திரு. இரத்தினம்.

கல்குடா தேவநாயகம் உணர்ச்சிமயமாக உரையாற்றினுர். 'குட்டக் குட்டக் குனிகிறவனும் மடையன்; குனியக் குனியக் குட்டுறவனும் மடையன்! இந்த நிலைதான் தொடர்ந்திருக்க வேண்டுமா? தமிழர் கூட்டணியை சிறிதாக மதித்து விடாதீர்—அது இந்நாட்டுத் தமிழ் மக்களின் 99 வீதமானேரது ஆதரவைப் பெற்றது' என்று கூறிய திரு. தேவநாயகம், 'ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற எப்படி நீங்கள் ஒன்று சேர்ந்தீர்களோ அதே போல தமிழர்களின் உரிமைகளைப்பெற நாம் ஏன் தமிழர் கூட்டணியின் கீழ் ஒன்று சேர முடியாது?' என்று கேட்டார்.

இவர்களது பேச்சுக்களின் விபரங்கள் முழுமையாகக் கிடைத்ததும் அவை சுதந்திரனில் இடம் பெறும்.

## ஒற்றுமை நிலைத்தது! எதிர்ப்பு பிசுபிசுத்தது!

தமிழர் கூட்டணியின் முடிவுப்படி தமிழ் பா. உ.க்கள் தேசிய பேரவைக்கு முதன் முதலாக சென்றிருந்த இம்மாதம் 4ம் திகதி தமிழ் பகுதியில் துக்கம் அனுட்டிக்குமாறும், கறுப்புக் கொடி பறக்கவிடுமாறும் தூண்டி, தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியை தவருன வழியில் திருப்பி தமிழர் ஒற்றுமையை முறியடிக்க முயன்ற சக்திகளின் வாலை தமிழ் மக்கள் ஒட்ட நறுக்கிவிட்டனர்.

இச்சக்திகளின் விபரீத கூக்குரலுக்கு செவிசாய்க்க மறுத்து தமிழர் ஒற்றுமையை கட்டிக் காத்த இளைஞர்களை தமிழினம் பாராட்டுகிறது.

## இந்தச் சோசலிசவாதிகள் மீது இடி விழாதா?

புதிய அரசியல் திட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்குச் சமத்துவம் இருக்கிறது—எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றனஎன்று கொக்கரித்து வருகிருர்கள் அமைச்சர் குமாரசூரியரும் அவருக்குக் குடை கொடி ஆலவட்டம் பிடிக்கும் அரசாங்க ஆதரவாளர்களான தமிழ் பா. உ.க்களும்.

ஆனுல் இதோ பாருங்கள்!

- இலங்கைத் தரைப்படையில் சேர்வதற்கு விண்ணப்பிப்போர் சிங்கள மொழியில் முன் கூட்டியே தேர்ச்சி உண்டு என்பதைத் தெளிவாக அத்தாட்சிப் படுத்தல் வேண்டும் என்று 9-6-72 வர்த்தமானியில் கூறப்பட்டுள்ளது. இது தான் தமிழ் மக்களுக்குத் தரப்பட்டுள்ள சமத்துவத்தின் இலட்சணமா?
- அடுத்த ஆண்டிலிருந்து எந்தத் தொழில் நுட்பக் கல்லூரியில் எந்தத் தொழிற் பாடத்திட்டத்தை பயின்ருலும், சிங்களத்தை கட்டாய பாடமாக படிக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதே இது தான் சமத்துவத்தின் இலட்சணமா? சிங்களம் பேசாத மக்கள் மீது சிங்க

(7-ம் பக்கம் பார்க்க)

### சிறையிருக்கும் செம்மல்கள்!

குடியரசு எதிர்ப்பு ஹர்த்தால் போராட்டத்தையடுத்து கைது செய்யப்பட்டு கடந்த ஒன்றரை மாதத்துக்கு மேலாக யாழ் சிறைச்சாலையில் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள எழுபதுக்கு மேற்பட்ட இளைஞர்களில் 39 இளைஞர்களின் பெயர்களை 18.6.72 சுதந்திரனில் தந்திருந்தோம். மேலும் 26 இளைஞர்களின் பெயர்கள் வருமாறு:-

40 சி. சிவகுமாரன், கொக்குவில்.

41 அ. வரதராசா, வண்ணுர்பண்ணை.

42 இ. கமலநாதன், மானிப்பாய்.

43 இ. இராசேஸ்வரன் நீர்வேலி.

44 தா. தியாகமூர்த்தி கோண்டாவில்.

45 இரவீந்திரன், கொக்குவில்.

46 சி. சுகுமார், கொக்குவில்.

47 இ. ராஜகிளி, மானிப்பாய்.

48 இ. சிவமோகன் திருநெல்வேலி.

49 ப. கோபாலகிருஷ்ணன், பரந்தன்.

50 உ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி.

51 கதிரமலை, மூளாய்.

52 க. சரவணபவன், நீர்வேலி.

53 த. முருகசோதிராசா, மூளாய்.

54 சு. தங்கவேல், தொல்புரம்.

55 ச. நவரத்தினம், மூளாய், சுதுமலை.

56 மு. தம்பிராசா, மானிப்பாய்.

57 க. விஜேகரன், பரந்தன்.

58 அ. இரத்தினம், யாழ்ப்பாணம்.

59 அ. நாகராசா, தொல்புரம்.

69 சு. தயாளன், கோண்டாவில்.

61 த. சிதம்பரம்பிள்ளை, ஊர்காவற்றுறை.

62 சு. சுந்தரேசன், கோண்டாவில்.

63 அ. ஆனந்தராசா, கோண்டாவில்.

64 வ. யோகராசா, கொடிகாமம்.

65 சி. நாகலிங்கம், மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணியின் முடிவுக்குக் கட்டுப்பட

# திருகோணமலை இளைஞர்கள் தயார்! தயார்!!

## பத்திரிகைச் செய்திகளைப் படித்து மனம் குழம்ப வேண்டாம்!

### கூட்டணி இளைஞர்கள் அறிக்கை!

'திருகோணமலையிலுள்ள இளைஞர்கள் சிலரைப்பயன்படுத்தி தமிழர் கூட்டணியைச் சிதறடித்திட தினபதியும் ஆளுங்கட்சி கும்பலும் சூழ்ச்சிபுரிகின்றன. இந்தச் சூழ்ச்சிகளைக் கண்டு தமிழ் மக்களே ஏமாருதீர்! தமிழர் கூட்டணியின் தீர்மானத்தில் கருத்துவேறுபாடு சில நமக்குள் இருப்பினும், கூட்டணியின் முடிவுக்கு கட்டுப்பட திருகோணமலையின் தன்மானத் தமிழ் இளைஞர்கள் என்றும் போல தயாராக இருக்கிருர்கள்.'

இவ்வாறு திருகோணமலை மாவட்ட கூட்டணியைச் சேர்ந்த கோணேஸ்வரன், தங்கமகேந்திரன் ஆகிய இளைஞர்கள் சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளனர்.

இந்த அறிக்கையில் அவர்கள் மேலும் கூறியிருப்பதாவது:

'பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதா இல்லையா என்ற பிரச்னை கடந்த ஒரு மாதமாக விவாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்த விவாதங்களில் எழுப்பப்பட்ட கருத்துக்களையெல்லாம் அலசி ஆரரய்ந்து — பகிஷ்கரிப்பைக் கைவிடுவது என்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகுழு முடிவுசெய்துள்ளது. தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு இறுதியாக ஒரு தீர்மானத்தை எடுத்த பின்னர் அதற்குக் கட்டுப்படவேண்டியது பொறுப்புணர்ச்சியுள்ள கிளைகளின் கடமையாகும்.

'தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு இப்பிரச்சினை மீது இறுதித் தீர்வு எடுத்த பின்னர் — தமிழர் கூட்டணியின் திருகோணமலை மாவட்டக் கிளை அதை ஏற்றுக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது அவசியம். அதுவே சனநாயக முறை. அதை விடுத்து தலையிருக்க வாலாடுவது போல தமிழர் கூட்டணித் தீர்மானத்தைக் கண்டித்து திருகோணமலை மாவட்டக் கிளை தீர்மானம் நிறைவேற்றுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. கட்டுப்பாடு இல்லாதவர்களால் வேறு எதையும் சாதிக்கவும் முடியாது.

'திருகோணமலை மாவட்ட தமிழர் கூட்டணியின் கூட்டம் முறைப்படி கூட்டப்படவில்லை. கூட்டணியின் உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்படவுமில்லை.

தமிழர் கூட்டணி திருமலை மாவட்டக் கிளை என்ற பெயருடன் ஒரு சிலர் கூடி நடவடிக்கைக் குழுவின் பகிஷ்கரிப்பைக் கைவிடும் தீர்மானத்தைக் கண்டித்திருக்கிருர்கள் என்ருல் அது திருகோணமலை மாவட்டத்தின் மக்கள் அனைவரது கருத்துமாகாது. திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் தமிழர் கூட்டணியின் தீர்மானத்துக்கு கட்டுப்படுகிருர்கள்.

தமிழர் கூட்டணியின் முடிவு தமக்கு இஷ்டமான தாக இல்லையென்ருல், அப்படிக் கருதுபவர்கள், கூட்டணியிலிருந்து முதலில் வெளியேறி விட்டு, அப்புறம் தான் தங்கள் சொந்தக் கருத்தை வெளியிட வேண்டும். இதுவே முறை. அதை விடுத்து உள்ளிருந்து கூட்டணியை தாக்குவது முறையாகாது.

3-7-72 தினபதியில் திருமலை இளைஞர் குமுறல்— தேசிய சபை செல்லும் முடிவு குறித்து" எனும் தலைப்பின் கீழ் 'தினபதி'யில் மூன்று இளைஞர்களினது படத்துடன் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த மூன்று இளைஞர்களினது கருத்தும் 'திருகோணமலை இளைஞர்கள் அனைவரினதும் கருத்தாகாது.

உண்மையில் தினபதியில் முன் பக்கத்தில் படம் போட்டு உங்கள் செய்தியைப் போடுவோம் — படத்துடன் அறிக்கை தாருங்கள் என்று எம்மிடமும் தினபதி நிருபர் கேட்டார்.

ஆக பத்திரிகையில் படம் வரவேண்டும் என்று விளம்பரத்துக்கு ஆசைப்படும் ஒரு சிலரைப் பிடித்து தினபதி முன் பக்கத்தில் அறிக்கை போட்டுவிட்டால் அது, திருகோணமலையிலுள்ள அனைத்து இளைஞர்களினதும் கருத்தாக மாட்டாது.

மீண்டும் கூறுகிருேம்— தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவின் இறுதித் தீர்மானம் குறித்து கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும், கூட்டணியை சிதறடிக்கும் எந்தச் செயலையும் திருமலை இளைஞர்கள் செய்ய மாட்டார்கள். தமிழர் கூட்டணியின் தீர்மானத்துக்கு கட்டுப்பட்டு அடுத்த போராட்டத்தில் இறங்க அவர்கள் தயாராகி விட்டார்கள் என்பதை மட்டும் தமிழ் ஈழத்து இளைஞர்களுக்கு அறியத்தருகிருேம்.




நா. சுந்தரலிங்கம்
செபஸ்தியார் கோவிலடி
மயிலிட்டி

கே: தமிழுணர்வு மிகுந்த கல்குடா எம். பி. (தேவநாயகம்) சிங்களம் மட்டும் சட்டத்தை ஆதரிக்கும் யு. என். பியில் அங்கம் வகிப்பதேன்?

ப: விரைவில் அவர் யூ. என். பி. யிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்வாரென்று எதிர்பார்ப்போம்!

கே: மனச்சாட்சி இல்லாத மாட்டினை 'மனச்சாட்சி' மாட்டின் என்று ஆசிரியர் எழுதிய காரணம் யாது?

ப: ஒருவரிடம் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறுவதும் அவரைக் கிண்டல் செய்யும் வழிகளில் ஒன்று!

ஃ

வே. குகானந்தா
திருநெல்வேலி

கே: தமிழர் கூட்டணியினர் முதன் முதல் திருமலையில் நடாத்திய கூட்டத்திற்கு, சுயாட்சிக்கழக தலைவரான நவரட்னத்திற்கு அழைப்பு விடுக்கவில்லையென்று விடுதலைப் பத்திரிகை கூறுகின்றதே இது உண்மையா?

ப: முழுப்பொய்! எல்லோருக்கும் போல அவருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது!

கே: தமிழ் மக்களின் எதிர்ப்பின் விளைவாகவா பாடசாலைகளில் தேசியக் கொடியேற்றுவதை கல்வி அமைச்சர் வாபஸ் பெற்ருர்?

ஆமாம்-ஆனல் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையென்று தானே கல்வி அமைச்சர் கூறிக்கொள்வார்?

ஃ

தமிழரசுத்தொண்டன்
5ம் வட்டாரம்
புங்குடுதீவு

கே: நமது போராட்டம் எப்போது தொடங்கும்?

● ப: எதிர்வரும் அக்டோபரில்!

ஃ

யாழரசன்,
யாழ்நகர்.

கே: குயுக்தியாரே, உமக்குப் பதிலாக திரு. கோவை அவர்கள் சில வேளைகளில் கேள்விகளுக்குப் பதில் தருகின்ருர் என்று நான் கூறுகின்றேன். இதை நீர் ஒப்புக்கொள்கின்றீரா?

ப: ஆசிரியரும் நானும் ஒரே உருவமைப்புள்ளஇரட்டையவர்கள் — அதனல் ஏமாந்துவிட்டீர் போலும்!

ஃ

சி. பெ. மனோகரன்,
துகேகொடை.

கே: தமிழ் இனத்தின் இன்றைய 'ஒற்றுமை' 20ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருந்திருந்தால்...?

ப: எதற்கும் காலம் கனிய வேண்டும் தம்பீ...!

ஃ

எஸ். ரி. நாதன்,
நாவலை.

கே: அமெரிக்காவுக்கும் வியட்நாமுக்கும் நடக்கும் சண்டையைப் பற்றி உங்கள் முடிவு என்ன?

ப: எத்தனை ஆண்டுகள் சென்ருலும் நீதியின் பக்கம் நிச்சயம் வெற்றியுண்டு!

ஃ

த. தயாநிதி,
பெல்மதுளை.

கே: காவலூர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் முகவரி என்ன? கடிதம் எழுதினால் பதில் அளிப்பாரா?

ப: பண்டிதர் கா. பொ. இரத்தினம், வேலணை என்று முகவரியிட்டால் கடிதம் அவரது கைக்கு போய்ச் சேர்ந்து விடும். கடிதம் கிடைத்து 3 நாட்களுக் கிடையில் அவரது பதிலும் வந்து விடும். கடிதங்களுக்கு உடனுக்குடன் பதிலளிக்கும் நல்ல பழக்கமுள்ள ஒரு சில பா. உ.க்களில் பண்டிதரும் ஒருவர்.

ஃ

செல்வி வசந்தகௌரி கனகரட்ணம்,
கொழும்பு 12.

கே: அமைச்சர் குமாரசூரியர் ஒரு தமிழராயிருந்தும் இப்படி தமிழை ஏளனம் செய்வது நியாயமா?

ப: குமாரசூரியரை ஒரு தமிழர் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

கே: பொருட்களின் விலைகள் வரவர அதிகரிக்கிறதே —இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? ஏழைகளின் வருமானத்தை அதிகரிக்க வைத்தால் மக்கள் பொருட்களை இலகுவில் வாங்குவார்களே!

ப: பொருட்களின் விலைகள் அதிகரிக்க அதிகரிக்க மூக்கூட்டணி அரசின் சோசலிசத்தின் சாயமும் வெளுத்து வருகிறதே! ஏழைகளின் வருமானத்தை உயர்த்து[illegible] [illegible]கரிப்பதில் அல்லவா அரசு கவனம் செலுத்துகிறது!

ராஜா,
கொழும்பு-6.

கே: சுயாட்சிக் கழகத் தலைவர் நவரத்தினம், தமிழ் பா. உக்கள் பதவி துறக்க வேண்டுமென்பதில் மும்முரமாக நிற்பது அந்தரங்க சுத்தியுடனு?

ப: 1961ம் ஆண்டு தமிழரசுப் பா. உ. க்கள் தடுப்புக்காவலில்வைக்கப்பட்டிருந்த போது, பாராளுமன்றத்தில் 'லீவு' எடுக்காமல் பதவி இழக்க வேண்டுமென்று பல தமிழரசுப் பா. உ. க்கள் கருதினர். ஆனல் அந்த நேரத்தில் ஊர்காவற்றுறை பா. உ.வாக இருந்த நவரத்தினம் தான் பதவி துறக்கக் கூடாது; கட்டாயமாக லீவுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்று விடாப்பிடியாக வாதாடியவர். பதவியில் இருக்கும் போது ஒன்று பேசுவதும் பதவியை இழந்த போது இன்னென்று பேசுவதும் நல்ல அரசியல் வாதிகளின் பண்பாகாது!

ஃ

க. ஜெயன்,
மாதகல்,

கே: அரசியல் என்பதன் பரமம் என்ன?

ப: இலங்கையைப் பொறுத்தவரை அரசியலில் இருந்து பிறப்பது!

சி. சங்கரப்பிள்ளை
கல்முனை

கே: தற்போதய அரசாங்கம் கடந்த பொதுத்தேர்தலில் இவ்வளவு பெரும்பான்மையாக வெற்றியீட்டியதற்குக் காரணம் தமிழரசுக் கட்சிப்பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழரசுக்கட்சி மேடைகளிலே பேசும்போது 'நாங்கள் இல்லாமல் எந்த அரசாங்கமும் ஆட்சியை அமைக்கமுடியாது'' என்று பேசியதையும் மற்றும் சிங்களத் தலைவர்களைத் தாக்கிப் பேசியதையும் அப்படியே சிங்களப் பத்திரிகைகள் மொழிபெயர்த்துப் பிரசுரித்து சிங்கள மக்களிடையே ஒரு இன உணர்வைத் துண்டியுள்ளதே யாகும் என்று சிலபேர்கள் காரணம் கூறுகிருர்களே இதைப் பற்றித் தாங்கள் கூறும் விளக்கம் என்ன?

ப: திரு. அமிர்தலிங்கம் அவர்களின் பேச்சுக்கு இந்நாட்டின் பொதுத் தேர்தல் முடிவையே மாற்றி அமைக்கும் சக்தி உண்டு என்ருல், ஈழத்தமிழினத்தின் சக்தி வாய்ந்த தலைவன் அமிர்தலிங்கம் அவர்களே என்பதை சிங்கள சமூகம் ஒப்புக்கொண்டு விட்டது என்பது தான் பொருள்!

ஃ

கு. கிருஷ்ணமூர்த்தி
உரும்பராய் கிழக்கு
உரும்பராய்.

கே: எமது பிரதமர் சீனு சென்றுள்ளதன் காரணம் என்ன?

ப: உஸ்ஸ்...! அது பரம ரகசியம்! சொன்னல் இந்திராவின் காதில் விழுந்து விடும்!

வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி
திருவாளர் குயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணி விடுதலைப் பேரணி!

## அரசியல் மேடை

**அன்பு நண்பா,**

**துரோகிகள்,**
**கயவர்கள்,**
**கண்ணியமற்ருேர்,**
**சுயநலமிகள்,**
**பதவிப்பித்தர்கள்,**

இப்படியெல்லாம் நம் தமிழரசுக் கட்சி மீதும்—தமிழர் கூட்டணி மீதும் வசைமாரி பொழிந்திடுவதிலே அளப்பிலா ஆனந்தமடைந்துவருகின்றனர் ஒரு சிலர் என்பதை நீ அவதானித்திருப்பாய்! தமிழினம், கருத்து வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு ஓரணியிலே திரண்டு உரிமைப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கும் இந்நேரத்தில், தமிழர் ஒற்றுமைக் கோட்டையாம் தமிழர்கூட்டணிக்கு வெளியே நின்று கொண்டு கூட்டணி மீது கல்லெறியும் இந்தச் சின்னமனம்படைத்தோர்சிலர் தமிழர்களாகவே பிறந்துவிட்டதை எண்ணி உண்மையில் வேட்கமும் வேதனையும் அடைகிறேன்!

நம்முடைய தமிழர் கூட்டணியை சிதறடித்திட—தமிழர் கூட்டணிக்கும் தமிழ் இளைஞர், மாணவர் சமுதாயத்துக்குமிடையே பிளவையும் பூசலையும் ஏற்படுத்திட—தமிழ் இனத்தின் எழுச்சியையும் போராட்ட உணர்ச்சியையும் முனை மழுங்கச் செய்திட — ஆளுங்கட்சியிடம் சரணுகதியடைந்து, தமிழினத்தின் கழுத்தறுக்கும் கொடிய சட்டமாம் குடியரசு அரசியல் சட்டம் உருவாக ஒத்துழைப்பு அளித்து அதற்கு சார்பாக கையெழுத்திட்ட ஆறு தமிழ்த்துரோகிகளின் துரோகத்தை மறைத்திட—இந்நாட்டுச் சிங்கள முதலாளிகளால் நடத்தப்படுகின்ற நாளேடுகள் அனைத்தும் கட்டுப்பாட்டுடன் தமிழர் கூட்டணித் தலைவர்கள் மீது செய்தி, கட்டுரை, அபிப்பிராயம், பேட்டி, என்கின்ற பல்வேறு உருவங்களில் நாள்தோறும் விஷமத்தனமான தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களின் உள்ளங்களை குழப்பி வருவதும், இந்த ஈனத்தனமான முயற்சியில் 'தினபதி'யும் 'தினகரனும்' கைகோத்து நிற்பதும் உனக்குத் தெரியும்!

**ஆனாலும் எனக்குத் தமிழ் மக்களின் சிந்தனைத் தெளிவிலும், அறிவிலும் அதிக நம்பிக்கையிருக்கிறது. தமிழ் இளைஞர்களும் மாணவர்களும், எவ்வளவு தூரம் உணர்ச்சி வேகம் படைத்தவர்களோ அவ்வளவு தூரம் அறிவுக் கண்கொண்டு சிந்திக்கும் ஆற்றலும்படைத்தவர்கள் என்கின்ற திடமான நம்பிக்கை எனக்கிருக்கிறது. எனவே நாளேடுகள் நாள்தோறும் எத்தகைய நச்சுக் கருத்துக்களை நாட்டிலே தூவிடினும், அந்தக் கருத்துக்கள் அறிவும் விடுதலை உணர்ச்சியும் படைத்த தமிழ் இளைஞர்களின் உள்ளங்களை கிஞ்சிற்றும் அலைக்கழிக்காது என்பதை நான் அறிவேன்!**

இந்த ஏடுகளின் ஒரே அடிப்படை நோக்கம்—தமிழினத்தின் விடுதலை உணர்ச்சியை அழித்துவிட வேண்டும்—தமிழினத்தின் கட்டுக்கோப்பைத் தகர்த்துவிடவேண்டும்— சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு தமிழினம் அடிமைபட்டு அழிந்தொழிந்து போக வேண்டுமென்பதுதான்! இந்நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு தான், தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையிலும் நாளேடுகள் அனைத்தும் செயற்படுகின்றன—செயற்பட்டு வந்திருக்கின்றன.

இப்பொழுது தமிழர் கூட்டணியினர் தேசியப் பேரவைக்கு செல்வது என்று எடுத்த முடிவைப் பெரிதுபடுத்தி—அதைச் சரணுகதியென்று வர்ணித்து தமிழ் இளைஞர்களின் உள்ளங்களை குழப்பி — தமிழர் கூட்டணியை சிதறடித்திடும் திட்டமிட்ட சூழ்ச்சியிலே நாளேடுகள் அனைத்தும் ஒன்றுபட்டு கைகோத்து இயங்குகின்றன! இதை நம்முடைய இளைஞர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்!

நாளேடுகளின் தரித்தனமான சூழ்ச்சிகளைப் பற்றிக்கூட நான் அதிகம் கவலைப்படவில்லை—ஏனெனில் அந்த வலைக்குள் நம்முடைய தமிழ் மக்கள் கிஞ்சிற்றும் சிக்கமாட்டார்கள் என்பதை நான் அறிவேன்! ஆனல் சுயாட்சிக்காகப் போராடப்போவதாக கூறிக்கொண்டிருக்கும் நவரத்தினமும் அவரது கட்சிப் பத்திரிகையும்கூட இந்த நாளேடுகளின் நயவஞ்சகப் பல்லவிக்கு அனுபல்லவி பாடி வருவதுதான் உண்மையிலேயே எனக்கு வேதனையைத் தருகிறது. மடலின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள வசைமொழிகளை நவரத்தினமும் அவரது கட்சியினருமே தமிழர் கூட்டணி மீது பொழிந்திருக்கின்றனர் — பொழிந்து தள்ளி வருகின்றனர்!!

திரு. நவரத்தினம் நமது இயக்கத்தைவிட்டுப்போனலும் உள்ளபடியே அவர் மீது மரியாதை வைத்திருந்தவர்களில் நானும் ஒருவன்! தமிழரசுக் கட்சியும் தமிழர் சுயாட்சிக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக இருந்து தமிழர் விடுதலைக்குப் போராடவேண்டுமென்று உளமார விரும்பியவர்களில் நானும் ஒருவன். ஆனல், இன்று சுயாட்சிக்கழகத்தினதும், அதன் தலைவரினதும் சுயநல சுயரூபத்தைக் கண்டு வெட்கித் தலைகுனிகிறேன்!

தமிழினத்துக்கு மிகப் பெரிய நெருக்கடி நிறைந்துள்ள இந்நேரத்தில்கூட—சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் இளைஞர்களின் உணர்ச்சிகளை தவருன திசையில் திருப்பி—தங்கள் பக்கம் இழுத்து—தமது கட்சியை வளர்த்திடவும், தமிழர் கூட்டணியையும், தமிழரசுக் கட்சியையும் அழித்திடவும் நவரத்தினமும் சுயாட்சிக் கழகத்தினரும் முழுமூச்சுடன் செயல்பட்டுவருகின்றனர். இது அப்பட்டமான சுயநலமின்றி இன நலன் பேணும் செய்கை என்று கூறிட முடியுமா?

நவரத்தினத்தைக் கேட்கிறேன்—பாராளுமன்றத்தில் உங்களுக்கு நம்பிக்கையில்லையென்கிறீர்கள்—பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்திட வேண்டுமென்றும் இப்போது கூறுகிறீர்கள்! அப்படிப்பட்ட நீங்கள் — உள்ளபடியே நீங்கள் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கையிருக்குமானல் — 1970 பொதுத்தேர்தலின்போது உங்கள் கட்சி ஆரம்பித்து முளைவிடு முன்பே ஏன் அவசர அவசரமாக தேர்தல் களத்தில் குதித்து மூக்குடைபட்டீர்கள்? தேர்தலையே முற்ருகப் பகிஷ்கரித்துவிட்டு, ஒரு தீவிர விடுதலை இயக்கத்தையல்லவா கட்டி வளர்த்திருக்கவேண்டும்? அதுவல்லவா பாராளுமன்றத்தில் நம்பிக்கையற்ற ஒரு விடுதலைத் தலைவன் செய்யவேண்டிய வேலை! அதைச் செய்திருப்பீர்களானல் உங்களைப் பாராட்டியிருப்பேன்! நானென்ன, நாடே பாராட்டியிருக்கும்!!

ஆனல் இன்றுவரை உங்கள் கழகத்துக்கென உறுப்பினர்களோ, இயங்கும் செயற்குழுவோ கூட இல்லை என்பதை உங்கள் கட்சிப் பத்திரிகையே ஒப்புக்கொண்டிருக்கிறதே! அமைப்பே இல்லாத நீங்கள் விடுதலைக்கு எப்படி போராடப் போகிறீர்கள்? இருக்கின்ற ஒரே அமைப்பான — தமிழர் ஐக்கியக் கோட்டையாம் தமிழர் கூட்டணியையும் குழப்பிக் குலைத்துவிட முயல்கிறீர்களே இது நீதியான செயல்தான?

**இன்றுகூட என்ன? குதர்க்கத்தையும், குத்தல் பேச்சையும் குழப்பும் எண்ணத்தையும், குற்றம் பிடிக்கும் போக்கையும் கைவிட்டு, தமிழர் கூட்டணியுடன் ஒத்துழைக்கும் மனப்பான்மை திரு. நவரத்தினத்துக்கும் இருக்குமேயானல் — பாராளுமன்றத்துக்கு செல்வது என்ற தமிழர் கூட்டணியின் முடிவை விமர்சித்துக்கொண்டிருப்பதைவிட—தமிழர் கூட்டணியுடன் இணைந்து தமிழினத்தின் சுதந்திரப் போராட்டத்துக்கு வேண்டிய திட்டங்களைத் திட்டலாமே! அதைவிடுத்து—தூர நின்று கொண்டு தமிழினத்தின் ஒற்றுமைக் கோட்டையான தமிழர் கூட்டணி மீது ஏன் கல்லடிக்கிறீர்கள்? வசைமாரி பொழிகிறீர்கள்? இது தமிழ்ப் பண்பாடு ஆகுமா?**

தமிழினம் இன்று ஓரணியில் திரண்டு—ஆறு அம்சக் கோரிக்கையை சிங்கள அரசுமுன் சமர்ப்பித்து — இந்த ஆறு அம்சக் கோரிக்கைகளையும் மூன்றுதிங்களுக்குள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், சுயநிர்ணய அடிப்படையில் சுதந்திரத்துக்காக போராடுவது என்று தமிழர் கூட்டணி மூலம் பிரகடனப்படுத்திவிட்டது! [illegible] உயிர் நாடியான தீர்மானமே தவிர பாராளுமன்றத்துக்கு போவதோ விடுவதோ அல்ல!

இந்த உயிர்நாடியான அடிப்படைத்தீர்மானத்தை மூடி மறைத்துவிட்டு, பாராளுமன்றத்துக்கு தமிழர் கூட்டணி பா.உ.க்கள் போகும் பிரச்சினையைப் பெரிதாக்கி, தமிழர் ஒற்றுமையை சிதறடித்திடவும் தமிழ் இளைஞர் உள்ளங்களைக்குழப்பிடவும் சிங்கள முதலாளிகளின் தமிழ் நாளேடுகள் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கின்றன என்ருல் அவற்றின் பின்னல் நவரத்தினம் போன்றவர்களும் ஓடலாமா?

**14 அம்சக் கோரிக்கையை முன்வைத்துப் போராடினுர் ஜனுப் ஜின்ன; அவரது கோரிக்கை மறுக்கப்பட்டதனுல் பாகிஸ்தான் என்ற தனி நாடு பிறந்தது. ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்துப் போராடினுர் வங்கபந்து ஷேக் முஜிபுர் ரகுமான்; அது நிராகரிக்கப்பட்டதனுல் தனி வங்கதேசம் மலர்ந்தது. இங்கும் தமிழர் கூட்டணி முன்வைத்துள்ள ஆறு அம்சக்கோரிக்கை மூன்று திங்கள் இடைக்காலத்துள் — ஏற்றுக்கொள்ளப்படவில்லையானல், சுயநிர்ணய உரிமை கோரி ஈழத்தமிழினம் போராட்டத்தில் குதிக்கும்; அப்போராட்டம், எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை நான் அறியேன்—ஆனல் போராட்டத்தின் இறுதி இலட்சியம் "தமிழ் ஈழம்" ஆகவே இருக்கும்! இதை நம்முடைய தமிழ் இளைஞர்களும் தமிழ் மாணவத் தோழர்களும் புரிந்துகொண்டு விடுதலைப் போராட்டத்துக்கு தயாராகிட வேண்டும்.**

நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்திட வேண்டும் என்ற தம்முடைய கருத்துக்கு ஆதரவாக 26-6-72 டெயிலி நியூஸ் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சில பகுதிகளை எடுத்துக்காட்டியிருக்கிருர் திரு. நவரத்தினம்.

தமிழினம் அரசியலில் எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்ய வேண்டும்— எப்படி நடக்க வேண்டும் — என்பதை முடிவு செய்யவேண்டியது தமிழர் தலைவர்களினதும், தமிழர் கூட்டணியினதும் பொறுப்பே தவிர — டெயிலி நியூசும், டெயிலி மிரரும், தினபதியும் தினகரனுமல்ல தமிழ் மக்களை வழி நடத்திடுவது!

தமிழினத்தின் சுதந்திரவேட்கையையும் இன உணர்ச்சியையும், அழித்தொழித்திடும் ஒரே நோக்குடன் செயல்படும் இந்த ஏடுகள், தமிழர்களைத் தவருன அழிவுப்பாதையில் தள்ளிவிடும் விஷமத்தனமான எண்ணத்துடன் சில கருத்துக்களை சுற்றி வளைத்தோ, எதிர்மறையாகவோ வெளியிடலாம். எனவே சிங்கள முதலாளிகளின் பத்திரிகைகள் கூறுவதற்கு திரு. நவரத்தினம் போன்ருேர் செவிசாய்த்திடுவதுதான் வேதனைக்குரியது!

திரு. நவரத்தினம் மேற்கோள்காட்டும் அதே டெயிலி நியூஸ் பத்திரிகை, ஜூலை முதலாம் திகதி ஆசிரியத் தலையங்கத்தில் என்ன கூறியிருக்கிறது தெரியுமா?

''பாராளுமன்றத்தைப் பகிஷ்கரியுங்கள் என்ற கூச்சல், தங்கள் இழந்த தொகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதற்கு ஒரு சில தமிழ் அரசியல் வாதிகளால் எழுப்பபபடுகிறது''

என்று கூறியுள்ளது. இது உண்மையா? இதையும் ஏற்பாரா திரு. நவரத்தினம்?

எனவே இந்நாட்டு நாளேடுகள் கூறுகின்றன என்பதற்காக நாம் சிந்திக்காமல் செயலாற்றிட முடியாது. தமிழினத்துக்கு எது நல்லதோ அதையே நாம் செய்திடவேண்டும்!

**பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதை போராட்ட ஆயுதமாகக்கொண்டு உலகில் எந்த இனமும் விடுதலைபெற்றதாக வரலாறு இல்லை.**

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அரசியல் சட்டத்தை எதிர்ப்பவர்கள் எத்தனைபேர்?

இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தை நாடாளுமன்றத்திலுள்ள தமிழ் பேசும் பிரதிநிதிகள் 26 பேரில் 13 பேர் ஆதரிப்பதாகவும் 13 பேர் எதிர்ப்பதாகவும் தப்பும் தவறுமாக சிலர் எழுதி வருகிறார்கள்.

ஆனால் உண்மையில் புதிய அரசியல் சட்டத்தை எத்தனைபேர் எதிர்க்கிறார்கள்? எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள் என்பதை தமிழ் பேசும் மக்கள் அறியவேண்டும்.

நாடாளுமன்றத்திலுள்ள தமிழ் பேசும் பிரதிநிதிகள் 26 பேரில், 13 பேர் தமிழர் கூட்டணியிலும், ஆறுபேர் ஐக்கிய தேசியக்கட்சியிலும் இருக்கிறார்கள். ஐக்கிய தேசிய கட்சியும் தமிழர் கூட்டணியும் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கும் கட்சிகளாகும்.

தமிழர் கூட்டணிப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து புதிய அரசியல் சட்டத்துக்கு எதிர்ப்புக் காட்டிய அதே சமயம், ஐ. தே. கட்சி உள்ளேயிருந்து அரசியல் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தது.

ஐ. தே. கட்சியிலுள்ள 6 தமிழ் பேசும் பிரதிநிதிகளும் அரசியல் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

எனவே நாடாளுமன்றத்திலுள்ள மொத்தம் 26 தமிழ் பேசும் பிரதிநிதிகளில் தமிழர் கூட்டணிப்பிரதிநிதிகள் 13 பேரும், ஐ. தே. கட்சி பிரதிநிதிகள் 6 பேருமாகச் சேர்ந்து 19 தமிழ் பேசும் பிரதிநிதிகள் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து இருக்கிறார்கள். தமிழ் பேசும் பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமானபேர் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கிறார்கள் என்பது இதனால் உறுதியாகிறது.

தனியே தமிழ் பிரதிநிதிகள் என்று பார்த்தாலும், நாடாளுமன்றத்திலுள்ள மொத்தம் 19 பிரதிநிதிகளில் தமிழர் கூட்டணிப்பிரதிநிதிகள் 13 பேரும் ஐ. தே. கட்சியிலுள்ள இரண்டு தமிழ பிரதிநிதிகளுமாகச் சேர்ந்து 15 பிரதிநிதிகள் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்திருக்கிறார்கள்.

இதே நேரத்தில் அரசியல் சட்டத்தை ஆதரித்து வாககளித்தோர் யார்? சென்ற தேர்தலில் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று பின்னர் கட்சிக் கொள்கையிலிருந்து வழுவியதால் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அருளம்பலம், தியாகராசா ஆகியோரும் தமிழரசுக் கட்சி சார்பில் வெற்றி பெற்று, பின்னர் கட்சிகட்டுப்பாட்டை மீறியதால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட மாட்டினும், ஐ. தே. க. ஆதரவுடன் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்று பின்னர் சுதந்திரக் கட்சியில் தொற்றிக் கொண்ட ராஜன் செல்வநாயகமுமே அரசியல் சட்டத்துக்கு ஆதரவாக கையொப்ப மிட்டிருக்கிறார்கள்.

புள்ளிவிவரம் கூறும் இந்த உண்மைகளை தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

மற்றோர் பிரச்சினையையும் சிலர் விஷமத்தனமாக வேண்டுமென்றே கிளப்பிவிட்டுள்ளார்கள். தியாகராசா, அருளம்பலம், மாட்டின் ஆகியோரைத் துரோகிகள் என்று திட்டிவிட்டு தமிழர் கூட்டணியினர் மட்டும் எப்படி தேசிய பேரவைக்கு செல்லலாம், அவர்கள் செய்தது துரோகமென்றால் இவர்கள் செய்வது துரோகமில்லையா என்று குதர்க்கமான ஒரு கேள்வியை சிலர் கேட்டு வருகிறார்கள்.

தேசியப் பேரவைக்கு சென்றதற்காக மாட்டினையோ அருளம்பலத்தையோ, தியாகராசாவையோ யாரும் துரோகிகள் என்று திட்டியது கிடையாது. தமிழர் கூட்டணியின் ஆதரவாளரான கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் தமிழர் கூட்டணி இப்பிரச்சினையில் முடிவு செய்யு முன்பே — தமது கட்சியின் தீர்மானப்படி தேசியப் பேரவைக்கு சென்று விசுவாசப்பிரமாணமும் எடுத்துக் கொண்டார். அதற்காக அவரைத் துரோகியென்று தமிழர் கூட்டணியினர் யாரும் கூறியது கிடையாது.

**தமிழினத்தின் கழுத்தறுக்கும் புதிய அரசியல் சட்டத்தைத் தயாரிப்பதற்கு அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்து அரசாங்கத்துக்கு இறுதிவரை பூரண ஒத்துழைப்புக் கொடுத்து, அரசியல் சட்டத்தை தமிழ் பிரதிநிதிகளாகிய தாங்களும் சேர்ந்து தயாரித்ததாக அதில் கையெழுத்திட்டிருப்பதாலேயே அருளம்பலம், தியாகராசா, ராஜன் செல்வநாயகம், மாட்டின் போன்றோர் தமிழினத்தின் துரோகிகள் என்று கருதப்படுகிறார்கள்!**

தமிழர் கூட்டணி பா. உ.க்களோ தமிழ் மக்களுக்கு விரோதமான புதிய அரசியல் சட்டத்தை தயாரிப்பதில் அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவுமில்லை; துரோகத்தனமான புதிய அரசியல் சட்டத்தை தாங்களும் சேர்ந்து தயாரித்ததாக அதில் ஒப்பமிடவுமில்லை; ஒப்பமிடப் போவதுமில்லை! அதை ஒழித்துக்கட்டவேண்டும் என்ற இலட்சியத்துடன்தான் தேசியப் பேரவைக்கு சென்றிருக்கிறார்கள்.

எனவே இத்தகைய விஷமத்தனமான பொய்ப் பிரச்சாரங்களுக்கு தமிழ் மக்கள் செவிசாய்க்காது தமிழர் கூட்டணியை மேலும் வலுவுள்ளதாக்கும் செய[illegible] ஈடுபடுவார்களாக.

## குதர்க்கம் பேசுவதைக் கைவிட்டு கூட்டணிக்கு வருக!

கடந்தத காலத்தில் விசுவாசப் பிரமாணம் செய்தல் ஆகாது. எனவே, தேசியப் பேரவையைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறிவந்த திரு. நவரத்தினம் இப்போது அந்தக் காரணத்தைக் கூறாது வேறு காரணத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்திருக்கின்றார்.

எந்த விசுவாசப் பிரமாணம் செய்யக்கூடாது என்று முன்பு கூறினாரோ அதே விசுவாசப் பிரமாணத்தை வழக்கறிஞர்கள் எல்லோரும் தமது தொழிலுக்காகச் செய்ய வேண்டிய நிலையேற்பட்டது. வழக்கறிஞர் திரு. நவரத்தினம் அவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அதனால் முன்பு சொன்ன அந்தக் காரணத்தை இப்போது கைவிட்டு விட்டார் போலும்.

இப்பொழுது பொறுக்கி எடுத்த பன்னிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தென் இலங்கைக்குத் தீராத தலையிடியையும், பேரதிர்ச்சியையும் கொடுக்கலாமென்ற ஒரு புதிய போராட்டமுறையைத் திரு. நவரத்தினம் முன் வைக்கிறார்.

மக்கள்போராட்டம்பலன் தராது. எனவே பன்னிரண்டு பாராளுமன்ற பிரதிநிதிகளும் போராடட்டுமென்பது அவர் கருத்துப் போலும். அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வேண்டிய இயக்கத்தைத் தமிழ் மக்கள் தமக்குள் மோதும் தேர்தல் போராட்டமாக மாற்றுவதே திரு. நவரத்தினத்தின் வழியாகத் தோற்றுகிறது.

பதின்மூன்று கூட்டணி உறுப்பினர்களில் ஒருவரை விட்டுப் பன்னிரண்டு உறுப்பினர்களையே பதவியைத் துறக்கும்படி திரு. நவரத்தினம் கூறுகின்றார். அவர் பகிரங்கமாகச் சில கூட்டங்களில் கூறியபடி திரு. தங்கத்துரைக்கு விதி விலக்கு அளிக்கின்றார் போலும்.

இந்தப் பன்னிரண்டு பேரும் தேசியப் பேரவைக்குச் செல்லாவிட்டால் அரசாங்கத்திற்கு எப்படி பேரதிர்ச்சியேற்படுமென்பதை அவர் விளக்கவில்லை. 'வெளியுலகம் பார்த்து இலங்கையிலே இருப்பது தமிழர் பங்கு பற்றாத பாராளுமன்றம் என்று சொல்லட்டும்'' என்று கூறுகிறார் திரு. நவரத்தினம். பன்னிரண்டு பேர் பகிஷ்கரித்தாலும் ஒன்பது தமிழர் தேசியப் பேரவையில் அங்கம் வகிப்பர் என்பதை அவர் மறந்துவிட்டாரா?

நியமனப் பிரதிநிதிகள் இருவரைச்சேர்க்காவிட்டாலும் ஏழு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அங்கிருக்கும்போது தமிழர் பங்கு பற்றாத பாராளுமன்றம் என்று வெளியுலகம் எவ்விதம் கணிக்க முடியும்? அன்றியும் இடைத்தேர் தல்கள் நடத்தப்பட வேண்டிய நாலு தொகுதிகளில் நெடுங்

**வி. தர்மலிங்கம் பா.உ.**
**இணைச்செயலாளர்-**
**தமிழர் கூட்டணி**

காலமாக தேர்தல் நடத்தாததுபோல இத்தமிழ்த் தொகுதிகளிலும் தேர்தல்களை நடத்தாது அரசாங்கத்தோடு ஒத்துழைக்கும் தமிழ் பிரதிநிதிகளின் குரலேதமிழ் இனத்தின் குரல் என்று வெளியுலகுக்குக் காட்ட அரசாங்கம் முயலும். எமக்குச் சார்பான பத்திரிகைகளோ, வேறு பிரசார சாதனங்களோ இல்லாத இன்றைய சூழ்நிலையில் வெளியுலகம் அதை நம்பும். தேசியப்பேரவையில் அரசாங்கத்தின் அக்கிரமத்தை அம்பலப்படுத்துவதன் மூலமே அரசாங்கத்துக்குத் தலையிடியைக் கொடுக்கலாம். உலகத்தின் கவனத்தையும் கவரலாம்.

அதே நேரத்தில் நாட்டில் ஒரு மக்கள்போராட்டத்தை நடத்துவதே தமிழர் கூட்டணியின் திட்டம், அந்தப் போராட்டத்தில் தலைவர்கள்கைது செய்யப்படலாம். கைது செய்யப்படும் தலைவர்களில் தேசியப் பேரவை உறுப்பினர்களும் இருந்தால் உலகம் அதைச் சிறப்பாகக் கவனிக்கும் என்பதை திரு. நவரத்தினம் அறியாமலிருப்பது அதிசயமே.

இப்படியான போராட்டங்களினால் மக்கள் துன்புறுத்தப்படுவார்கள் என்று திரு. நவரத்தினம் கூறுகின்றார். துன்பமின்றி விடுதலை பெறலாமென்பது தான் சுயாட்சிக் கழகத்தின் கருத்தெனில் அவர்கள் வழியே உண்மையான பாலைவனத்திற்கு உணர்ச்சியுள்ள இளைஞர்களை அழைத்துச் செல்லுமென்பதில் ஐயமில்லை.

தமிழர் கூட்டணி எடுத்த ஏகமனதான முடிவை திரு. நவரத்தினம் தமிழரசுக் கட்சியின் முடிவாகக்காட்ட முயலுகின்றார். 14-5-72ல் திருகோணமலையில் உதயமான தமிழர் கூட்டணி தமிழினத்தின் சமீபகால அரசியலில் ஒரு முக்கியமான மைல் கல் என்பதை மறைக்கப் பார்க்கின்றார் திரு. வ. நவரத்தினம். அவரும் அங்கு அழைக்கப்பட்டார். ஆனால் சுயாட்சிக் கழகத் தலைவர் என்று முகவரியிடாத காரணத்தால் வர மறுத்து விட்டார் அவர்.

தமிழ் வழக்கறிஞர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் கூட்டணிக்கு அழைக்கப்பட வில்லை. திரு. நவரத்தினம் அழைக்கப்பட்டது ஓர் அரசியல் இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் தான் என்பதை திரு. நவரத்தினம் அறியாமலிருக்க முடியாது.

கூட்டணியில் சேர்ந்து ஏனைய கட்சிகளோடு தமிழர் நலனுக்காக ஒரே வழியைக் காட்டத் தவறி அரசியல் பாலைவனத்தில் நிற்கும் திரு. நவரத்தினத்திற்கு கூட்டணி நடத்த எண்ணியிருக்கும் மக்கள் போராட்டம் பெரும் தலையிடியாய் இருக்குமென்பது அவர் அறிக்கையிலிருந்து தெளிவாகின்றது. ஆனால் கூட்டணியின் பின் திரண்டு நிற்கும் இளைஞர்களின் மனத்தைக் குழப்பும் முயற்சியைக் கைவிட்டு, ஒத்துழைக்கும் மனப்பான்மையோடு அவர் வருவாரானால், கூட்டணியின் கதவுகள் இன்னும் திறந்திருக்கின்றன என்பதை அவருக்குக் கூற விரும்புகின்றேன்.

## நட்ட ஈடு கோரி நடவடிக்கை!

கந்தப்பளையைச் சேர்ந்த ளேட் பெல் (புதுப்பகளவத்தை) தோட்டத்தில் கடந்த 29-5-72, ஞாயிற்றுக் கிழமை வேலைபார்த்துக் கொண்டிருந்த மேற்படி தோட்டத்தின் கங்காணி திரு. காசி என்பர் எதிர்பாராத விதமாக காட்டெருமை ஒன்றினால் பலமாக தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்தார்.

சுமார் 48 வயதுடைய இவர் ஐந்து பிள்ளைகளையும் தனது மனைவியையும் விட்டுப்பிரிந்தமையால் அன்னாருக்கு நஷ்ட ஈடுகோரி மேற்படி தோட்ட நிர்வாகத்துடன் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் இராகலை மாவட்டப் பிரதிநிதி திரு. வ. ஆறுமுகநாதன் அவர்களும், துணைப்பிரதிநிதி திரு. எம். நடராஜமூர்த்தி அவர்களும், தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

காலஞ்சென்ற திரு. காசி அவர்கள் பிரபல தொழிற்சங்க வாதியும், இ. தொ. கழக பொருளாளருமாவார். இவரின் திடீர் மரணத்தை கேள்வியுற்ற இலங்கைத் தொழிலாளர் [illegible] யத்தில் அனுதாபக் கூட்டம் நடத்தப்பட்டது. இவரது

மரணச் சடங்குகளில் கழகத்தின் இராகலை மாவட்டப் பிரதிநிதிகளான திரு. வி. ஏ. நாதன், திரு. எம். மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எனினும் காட்டெருமைகளால் இனிமேலும் இவ்வாறான தீங்குகள் நிகழாதிருக்க தொழிலாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்பளிக்குமாறு தோட்ட நிருவாகத்திடம் இலங்கைத் தொழிலாளர் கழக இராகலை மாவட்டப் பிரதிநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாணவர் பேரவை உறுப்பினர் கருத்து!

''பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதா இல்லையா என்ற பிரச்சினையில் தலையிட்டு மாணவர் பேரவை தன்னைக் குழப்பிக்கொள்ள விரும்பவில்லை. இது சம்பந்தமாக மாணவர் பேரவையின் நிர்வாகக்குழு கூடி விவாதிக்கவுமில்லை.

''இந்தப் பிரச்சினையில் அக்கறை செலுத்துவதை விட-மாணவர்களை ஒன்று திரட்டி தமிழினத்தின் உரிமைப் போரை நடத்துவதிலேயே நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.''

—இவ்வாறு மாணவர் பேரவை உறுப்பினர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## இந்தச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளத்தை திணிப்பதுதானு சோசலிசம்?

● போட்டிப் பரீட்சைகளின் மூலம் அரசாங்க சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்தபோது 40 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை தெரிவு செய்யப்பட்ட தமிழர்கள், இப்போது 'கம்பியூட்டர்' மூலம் நடத்தப்படும் தெரிவில் ஆக 12 சதவீதமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்களே! இது ஏன்? இதுதான் சமதர்மமா?

மொத்த சனத்தொகையில் 1/3 பகுதியினர் தமிழராக இருந்தும், உத்தியோகம் வழங்கப்படுவது சிங்களவருக்கு 80 வீதம் தமிழருக்கு 12 வீதம் என்ற அடிப்படையில் தானு? இதுவா சோசலிசம்!

இந்த சோசலிச வாதிகள் மீது இடி விழாதா?

## தேசியக்கொடி பிடுங்கி வீசப்பட்டது!

18.6.72ல் நடைபெற்ற வல்வை சிதம்பராக் கல்லூரி விளையாட்டுப் போட்டியின் பொது அதிபரால் ஏற்றப்பட்ட தேசியக்கொடி மாணவர்களால் பிடுங்கி வீசப்பட்டதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாட்சிக் கழகத்தின் சுயநலப் பித்தலாட்டம்!

## கருத்துப் பிரச்சாரக் குழுவின் விதண்டாவாதத்துக்கு ஆப்பு!

**நீ. மே. யோ. வேதநாயகம்**

'கைகளோ ஈசாவினது போலிருக்கிறது, குரலோ யாக்கோபினுடையது போலிருக்கிறது' என்றொரு விவிலிய வாக்கியமுண்டு. பழைய ஏற்பாட்டைப் படித்தவர்கள் அதற்குரிய சந்தர்ப்பத்தை அறிவார்கள். மேற்படி பிரசாரக் குழு ஏழுபக்கங்களில் ரோனியோ பண்ணப்பட்ட ஒரு வெளியீட்டைக் கொழும்பு நகரில் விநியோகித்துள்ளது. தமிழ்க் கட்சியினர் தேசிய அரசுப் பேரவையைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று அப்பிரசுரம் தூண்டி நிற்கிறது. ஆனால் கட்டுரை, உணர்ச்சி வழி நிற்கிறதன்றிச் சிந்தனை வழியில் நிற்கவில்லை. அப்பிரசுரத்தில் காணப்படும் கருத்துச் சிதைவுகள் சிலவற்றை சுண்டு விளக்க விரும்புகிறேன். பின்னர் இது யாருடைய குரலாயிருக்கலாம் என்பதை வாசகர்களே ஊகியுங்கள். ஏன் நானே வெளியிடுகிறேன்.

### இதுதானா நன்றி?

கடந்த இருபது வருடங்களும் தமிழ் உறுப்பினர் பேசிக் கண்டது என்ன? என்றொரு கண்டன வினாவை விடுதலை வேட்புக் குழு கடாவுகின்றது. தமிழ்க் கட்சிகள் தங்களுடைய இலட்சியத்தில் வெற்றி அடையவில்லையென்றாலும், தமிழ் நம் நாட்டில் இன்றும் உயிர் வாழ்வது இக் கட்சிகள் குரைத்துக் கொண்டிருப்பதாலல்லவா? இக்கட்சிகளில்லாவிட்டால் வட கீழ் இலங்கையுமே நீர் கொழும்பு போல், சிலாபம் போல், புத்தளம் போல் அரைத் தமிழ் காற்தமிழ் மயமாக மாறியிருக்கும். யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் எல்லாம் சிங்களக் 'குருவரய' இருப்பார்கள். பள்ளிக்கூடங்கள் பல சிங்கள மூலம் போதிக்கப்படும் பாடசாலைகளாக உருமாறியிருக்கும். புத்தம் சரணம் கச்சாமி என்னும் மும்மணி மந்திரம் ஒலித்துக்கொண்டிருக்கும். தமிழ்ப் பெயர்கள் பல சிங்களப் பெயராக மாறியிருக்கும். தமிழர் உத்தியோகம் பெறுவது குதிரைக் கொம்பாகியிருக்கும். தமிழ் பேசும் இஸ்லாமியர் இன்றைய சுகபோகங்களை அநுபவிக்க மாட்டாது பெரிதும் திண்டாடியிருப்பர். திரிகோணமலை தமிழர் கையிலிருந்து முற்றாகப் பறிக்கப்பட்டிருக்கும். தமிழ்ப் பகுதிகளெல்லாம் சிங்களக் குடியேற்றத்தால் பறிக்கப்பட்டிருக்கும். மலை நாட்டுத் தமிழர் சிங்களவராய் உருமாறியிருப்பர். அலைமோதிக்கொண்டெழுந்த சிங்கள வெள்ளத்தை முற்றாகத் தடுக்க முடியாத போதிலும் ஓரளவாவது கட்டுப்படுத்தியிருப்பதை விடுதலை வேட்கை மிக்க தமிழர் ஏன் சிந்திக்கத் தவறினார்கள். இதுதானா நன்றிகாட்டும் பண்பு?

### முக்கிய இடத்தை இழக்கலாமா?

'சிங்களத் தலைவர்கள் தமிழரின் பிரச்சினையை அனுதாபத்துடன் நோக்கவில்லையென்பதும் அவர்களுக்கு அதைத்தீர்க்க விருப்பம் இல்லையென்பதும் உண்மை. அதற்காகவேபோராடுவதற்கென மக்களால் தெரியப்பட்ட தளபதிகளும், சேனைத் தலைவர்களும் போர்க்களத்தின் முக்கியமான ஒரு பகுதியை விட்டு வெளிவர வேண்டுமா? தலைவர்களோ, ஊழியர்களோ தங்கள் பதவிகளைத் துறந்தால் சேனையில் குழப்பம் (mutiny) உண்டாகுமன்றி அமைதியோ, சமாதானமோ போராட்ட உற்சாகமோ உண்டாவது எப்படி?

பாராளுமன்றமோ, அது போன்ற பேரவையோ ஒரு குளம் போன்றது. உறுப்பினர்கள் குளத்தில் வாழும் முதலை அனையவர்கள். குளத்தில் இருக்க வேண்டிய முதலையை வெளியிற் தூக்கிப் போட்டால் சிறிய நாயும் அதை வென்று விடும் அல்லவா? 'நெடும் புனலின் வெல்லும் முதலை அடும் புனலின் நீங்கின் அதனைப்பிற' என்றார் வள்ளுவரும்.

### எல்லாரும் பகிஷ்கரித்தால் பலன் உண்டு

தேசிய அரசப் பேரவை இன்று அமைக்கப்பட்டிருக்கிறதற்கு இயைய வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ்க் கட்சிகளுக்கு விசுவாசம் இல்லாத பல உறுப்பினரும் உண்டு. இப்படியான ஒரு தருணத்தில் எல்லாத் தமிழ் உறுப்பினருமே தேசிய அரசப்பேரவையைப் பகிஷ்கரித்தால் பலன் உண்டு. அதற்குக் கருத்தும் உண்டு. குறிக்கப்பட்ட சிலர் தேசிய அரசுப் பேரவையைப் பகிஷ்கரித்து வெளியில் என்னத்தைத்தான் வெட்டி வீழ்த்தப்போகிறார்கள்? சொல்லுவார் சொன்னாலும் கேட்பாருக்கு மதியில்லையா?

தமிழ் இனத்தின் பிரச்சினைதான் முக்கியமானதாயினும் நாட்டுப் பொதுப் பிரச்சினைகள், உலகப்பிரச்சினைகள் இல்லையா? அவை தலைதூக்கும் போது தமிழரின் குரல் ஒலிப்பது எப்படி? எடுத்துக்காட்டாக இலங்கைப் பிரதமரின் சீனச் செலவு திரிகோணமலைத் துறைமுகத்தோடு தொடர்புடையதென்றும்; அது இந்தியாவுக்குப் பாதகமாய் அமையலாமென்றும் வதந்திகள் உலாவுகின்றன. அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் எங்கள் பிரதிநிதிகள் வெளியில் நிற்கலாமா?

### சான்று உண்டா?

மேலும் தலைவர்களை மக்களில் நம்பிக்கை வைக்கும்படியும் அவர்களின் விருப்புக்கு அமையும்படியும் மேற்படி பிரசுரம் வற்புறுத்துகிறது. மக்கள்தங்கள் பிரதிநிதிகளைத் தேசியப் பேரவையைப் பகிஷ்கரிக்குமாறு குரல் எழுப்புகிறார்கள் என்பதற்குச் சான்றுகள் உணடா? முப்பது இலட்சம் தமிழ் மக்களின் உள்ளத்தை அளந்தறியும் 'கொம்பியூட்டர்' இலங்கையில் உண்டா? தமிழ்ப் பொது மக்களில் எவருமே துரோகம் செய்ய மாட்டார்கள். ஆனால் எளிதில் ஏமாறக் கூடியவர்கள் பல்லாயிரவர் உண்டு.

மக்களுக்குத் தொண்டர்கள் யார்? துரோகிகள் யார் என்று முன்கூட்டியே காணக் கூடிய சக்திஉண்டா? இன்று அரசாங்கத்தோடுஒட்டி உறவாடும் உறுப்பினர்கள் தங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று மக்கள் இப்போதுதான் பச்சாத்தாபப் படுகின்றனர். தமிழ் மக்களின் உண்மையான இதயத்துடிப்பைச் செம்மையாகக் கண்டு கொண்ட வைத்தியர் யார்? தமிழ் மக்களை நன்றி கெட்டவர்கள் என்று யார் சொன்னார்கள்? ஆனால் மக்களை ஏமாற்றுபவர்கள் பலர் உண்டு. மக்கள் விழிப்புடையவர்களாய், அரசியல் ஞானம் உடையவர்களாய் இருந்திருப்பின் தானைத் தலைவர்கள் வெளியே தள்ளப்படவும், மண்டுகள் உள்ளே நுழையவும் முடிந்திருக்குமா?

### மக்களை ஏமாற்ற முயற்சி

கட்சித் தலைவர்களை துரோக மனப்பான்மையுடைய தமது வேட்பாளர்களை அளவிட முடியாத போது சாதாரண மனிதன் வெளிவேடதாரிகளை எப்படி இனங்காண முடியும்? ஆகையால் மக்கள் தங்கள் பிரதிநிதிகள் தேசிய அரசப் பேரவைக்குச் செல்லக் கூடாது என்று விரும்பினால் அதைக் காட்ட உறுதியான வேறு வழியில்லையா சனத்தின் பிரமுகர்கள் ஒன்று கூடித் தத்தம் பிரதிநிதியிடம் சென்று தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கலாம். பலவகையான மன்றங்களும் தீர்மானம் நிறைவேற்றலாம். உள்ளூர் ஆட்சிச் சபைகள் தீர்மானங்கள் நிறைவேற்றலாம். கொழும்பில் பிரசுரங்களைப் பரப்புவதால் நன்மையுண்டா?

விடுதலை வேட்கைக் குழு தமிழ்த் தொகுதிகளுக்குச் சென்று வீடு வீடாக ஆதரவு திரட்டலாம். வெவ்வேறு சங்கங்கள் தங்கள் விருப்பைத் தெரிவிக்கலாம். சரியான முகவரி இல்லாத விடுதலை வேட்கைக் குழு சில ஆயிரம் பிரதிகளைத் தட்டச் சேற்றி மக்கள் இயக்கம் ஒன்றை வளர்க்க முடியுமா? இவர்களும் மக்களை ஏமாற்றவே முயல்கின்றனர்.

### வீம்புக்காக பகிஷ்கரிப்பதா?

இன்று புதிய அரசியல் திட்டத்துக்கு எதிரான சூழ்நிலை உண்டென்பதை மக்கள் சந்தேக மறக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் சிங்களப் பொதுமக்கள் கொஞ்சமாவது மருள்கிறார்கள் என்பதற்குத் தகுந்த ஆதாரம் ஏதும் உண்டா?

தமிழ்க்கட்சிகள் தேசிய சபையைப் பகிஷ்கரிப்பதை சிங்களவர் அச்சத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்களா? அப்படியாயின் தினபதிபோன்ற நாளேடுகள் பகிஷ்கரிப்பை வரவேற்பதைப் போல் காணப்படுகின்றனவே — இதன் மர்மம் என்ன? சிங்களவர் அப்படி இப்படிச்சொல்லித் தமிழரை இகழ்வார் என்பதற்காகத் தேசியப் பேரவையைப் பகிஷ்கரிக்க வேண்டுமா? அவர்கள் பகிஷ்கரித்தாலும் ஏசுவார்கள். பகிஷ்கரிக்காவிட்டாலும் ஏசுவார்கள். சிங்களவருக்காக அதாவது வீண் வீம்புக்காகத் தேசியப் பேரவையைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்பது பொருந்தாத வாதமாகும்.

### உற்சாகம் எப்படிக் குறையும்?

தமிழ்க்கட்சிகள் தேசிய பேரவையைப் பகிஷ்கரிப்பதால் இளைஞருக்கு உற்சாகம் அதிகரிக்கும் என்றும் இல்லாவிட்டால் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையற்று விரக்தியுற்றுச் சோர்ந்து போவார்கள் என்றும் கூறப்படுகிறது. இது எப்படியென்று எனக்குப் புரியவில்லை. இளைஞர்களுக்கு உண்மையான விடுதலை விறு இருப்பின் உற்சாகத்தோடு ஈடுபடக்கூடிய இயக்கம் பலவற்றை உண்டு பண்ணலாம்.

தேசிய நாளேடுகளைப் பகிஷ்கரிக்கலாம். இதில் செயற்படுவதற்குப் பம்பரம் போல் சுழன்று சுழன்று உழைக்கலாம். தமிழர்களின் சாதி வேற்றுமைக்கு முற்றுப்புள்ளி போட அயராது உழைக்கலாம். சமயங்களில் உள்ள மூடப்பழக்க வழக்கங்களை அகற்றி அவற்றைப் புனிதப் படுத்தலாம். தெற்கேயிருந்து உற்பத்தியாகும் சுகபோகப் பொருட்களைப் பகிஷ்கரிக்கலாம், அடையாள அட்டையையே பகிஷ்கரிக்கலாம். வானொலிக்குப் பிறந்த தின வாழ்த்து அனுப்புகிறவர்களை அப்படி அனுப்பாது செய்யலாம். தமிழ்த்துரோகிகளைச் சமுதாயத்திலிருந்தே பகிஷ்கரிக்கலாம். இவற்றையெல்லாஞ் செய்யுங்கள்.

### நேரடி நடவடிக்கை

இவற்றில் வெற்றி கண்ட பின் நேரடி நடவடிக்கைகளான சட்டமறுப்புகளோ, ஒத்துழையாமையோ செய்யலாம். அப்பொழுது கட்டாயமாக நமது பிரதிநிதிகள் அரசியல் சாசனத்துக்கு விசுவாசமற்றவர்களாய்க் கருதப்பட்டு இராசத்துரோகக் குற்றஞ் சுமத்தப்பட்டு மறியலுக்கு அனுப்பப்படலாம். அப்படிச் சிறைப்படும்போது தங்கள் ஸ்தானங்களை இழப்பார்களாயின், புதிய புதிய ஆட்களைத் தேசியப்பேரவைக்கு அனுப்பிச் சிறையை நிரப்பலாம். பகிஷ்கரிப்பதும் மீண்டும் தேர்தலுக்கு நிற்பதும் கருத்தற்ற செயல்களாகும். அரசியல் ஒரு விளையாட்டல்ல.

நமது பிரதிநிதிகள் தேசியப்பேரவைக்குச் சென்றால் இளைஞரின் உற்சாகம் நீங்கும் என்று கற்பனை செய்ய நியாயம் என்ன? இப்பொழுதுள்ள பிரதிநிதிகள் பதவியைத் துறந்தபின் மீண்டும் வெற்றிபெற்றாலும் மதியிழந்த சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கு மதிப்பு அளிப்பார்கள் என்பதற்கு ஆதாரம் ஏதும் உண்டா? வெளி உலகு நமக்கு அனுதாபம் காட்டும் என்பதற்குச் சான்று இல்லை. சிங்கள அரசியல் வாதிகள் எவ்வளவு காலம் புறக்கணிப்பார்கள் என்ற கேள்விக்கு அவர்களே மறுமொழி சொல்ல வேண்டும்.

### எப்போது சிந்திப்பர்?

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லாத் தொகுதிகளையும் — முஸ்லீம்கள் உட்பட — தமிழ்க் கட்சிகள் வெல்லுங் காலத்தில்தான் சிங்களவர் சிந்திப்பர். அப்படி நடவாதபடி அவர்கள் வரம்பு கட்டி வருகின்றனர். சிங்களவர் தயவு காண்பிப்பர் என நம்பிப் போராடுவதிலும் சரணாகதியடைவது சிறந்தது. சிங்களவரைக் கண் திறக்க வைக்க விரும்புந்தமிழர் இந்தியாவின் உறவைப் பலப்படுத்த முயலவேண்டும். தமிழ் நாடுகள் இரண்டையும் இணைக்க வழிகோலவேண்டும்.

பகிஷ்கரிப்பு நமக்குப் புதியதொன்றல்ல. டொனமூர் அரசியல் திட்டத்தை நாம் பகிஷ்கரிக்கவில்லையா? ஆகவே பரீட்சித்துப் பார்ப்பதற்கு இது காலமுமல்ல விவேகமுமல்ல. அதனால் ஏற்படக் கூடிய இழப்பை நாம் என்றுமே ஈடு செய்ய முடியாது. வேண்டாம் இந்த விபரீதம்.

### முன்னுக்கு பின் முரண்

முன்னுக்குப் பின் முரணான பல நியாயங்களை விடுதலை வேட்புக் குழு தந்திருக்கிறது. பகிஷ்கரிப்புக்குப் பின் என்ன என்பது தெளிவாக்கப்படவில்லை. நமது பிரதிநிதிகளைப்பற்றி வம்புத்தனமாக சுயநலவாதிகள், பதவி வேட்கை பிடித்தவர்கள் என்பன போன்ற சொற்பிரயோகம் அமோகம். அப்படிப்பட்டவர்களாயிருந்தால் மாட்டின், அருளம்பலம், தியாகராசா, ராசன் செல்வநாயகம் முதலியோரின் வழிகளை இலகு

(8ம் பக்கம் பார்க்க)

## பணியொன்று நிலைநாட்டு!

"மன்னிவளன்"

தாய்ப்பாலைக் குடித்தவர்கள் தன் நிலையை மறந்துவிட்டு
தம்வீரம் தம்தீரம் தமது புகழ் இழந்து விட்டு
நாய்ப்பாலைக் குடித்தவர்போல் நக்கியடி வாழ்ந்துகொண்டு
நன்மைதான் செய்கின்றோம் நமக்கென்று மொழியுரைத்து
நோய்ப்பாலை ஊட்டுகின்றார் நேர்த்தி மிகு உணவென்று
நொந்து கெட்ட தமிழினமே நீயுணர்வ தெப்போது?

வாழ்ந்துகெட்ட தமிழினமே வரலாற்றை மறந்தனையோ
வருகின்ற துயர்கண்டு வழிமாறிப் போவதென்ன
தாழ்ந்துகெட்டுப் போவதிலும் தாய்தந்த பால் நினைந்து
தனித்தெழுந்து அறை கூவு தவிடுபொடி ஆகட்டும்

பிச்சையென்று கேட்பதோடா பின்சென்று மற்றவரை
பிறகென்ன உனக்குண்டு பெருமையொடு கூறுதற்கு
கச்சையொன்று போதுமடா காப்பதற்கு மானமதை
கால்பிடித்து கையேந்தும் கழிவுற்ற நிலை மாற்று

எனவேதான் தமிழா நான் இயம்புகிறேன் உன்றனுக்கு
என்மொழியை சற்றுக்கேள் தன்மொழியை காப்பதற்கு—
வேலெடுத்துப் போராட வேண்டாம் நீ தமிழன்பா
கால்பிடித்து வாழாமல் இருந்து விடு அது போதும்
வாளெடுத்துப் போராட வேண்டாம் நீ இளந்தமிழா
ஆளடிமை ஆகாமல் இருந்துவிடு அதுபோதும்
அம்பெடுத்துப் போராட வேண்டாம் நீ அரத்தமிழா
வம்பருக்கு வால்பிடித்து வாழாதே அதுபோதும்
குண்டெறிந்து போராட வேண்டாம் நீ குலத்தமிழா
குண்டருக்கு குனிந்து [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணியின் முடிவும் தமிழ் பொதுமக்கள் கருத்தும்!

இன்று நாம் போராட்டம் என்னும் சமுத்திரத்திலே விடுதலை என்னும் கரையை அடைய தமிழரசுக் கட்சி என்னும் மிதவையில் சென்றுகொண்டிருக்கிறோம்.

இன்று எம்மிடையேஉள்ள பெரிதாக்கப்பட்ட பிரச்சினை தமிழர் கூட்டணி பிரதிநிதிகள் பேரவைக்கு செல்வதா? இல்லையா? என்பது தான். இது தவறான விளக்கம்!

எமது விடுதலைப்போராட்டத்தை விரிவுபடுத்தி மக்களைத் திரட்டி வெற்றிகரமாக விடுதலையடைவதா? அல்லது நம்மை நாமே குழி தோண்டிப் புதைத்து தமிழரை சமுத்திரத்தில் மூழ்கடிப்பதா? இதுதான் உண்மையான பிரச்சினை இதைத் தான் ஒவ்வொரு தமிழ் இளைஞனும் தமிழனும் உணர வேண்டும்.

நான் கூறுவது என்னவென்றால் விடுதலை வெள்ளம் புறப்படுகிற இந்த நேரத்திலே, தமது நிலையை தமிழர் உணர்ந்து கொதிக்கிற இந்நேரத்திலே விடுதலை அல்லது வீர மரணம் என்று இளைஞர்கள் துடிக்கிற இந்த வேளையிலே தமிழ்த் தலைவர்கள் விடுதலை வேண்டி ஒன்று பட்ட நிலையிலே அதாவது பெரும்பான்மையோரும் ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களின் அடிகடிகளும் இதைக் கண்டு கலங்கி திகைத்து திணறும் பொழுது தமிழ் பா. உக்கள் தம்மை மறந்து கடமையை மறந்து தூக்கு கயிற்றை தாமே தமக்கு மாட்டுவதா?

என்ன செய்தாலும் ஒரு பொழுதும் பா. உக்கள் பேரவையை பகிஷ்கரிக்கக் கூடாது. இது தலைவர்களுக்கு தெரியாததல்ல இதை ஒரு பிரச்சினையாக்கிய பெருமை சொறி நாயினுடையது. ஒரு பா. உ. கூட இராஜினமா செய்யக் கூடாது.

நான் அறிவாளியுமல்ல, தீர்க்கதரிசியுமல்ல, மந்திரவாதியுமல்ல, ஒரு தமிழ் இளைஞன். ஆனால் எல்லாரும் எல்லாக் காரணத்தையும் சொல்லிவிட்டார்கள் ஒன்றை மட்டும் சொல்லவில்லை.

அதாவது 1970 மே 27ம் திகதி சிங்கள ஏகாதிபத்திய பிரதிநிதிகள் மகாராணிக்கும், சோல்பரி அரசியல் திட்டத்திற்கும், அதன் கீழ் அமைந்த பாராளுமன்றத்திற்கும் விசுவாசப் பிரமாணம் எடுத்துத்தானே அங்கம் வகித்தார்கள் அவர்கள் எந்த ராணிக்கு விசுவாசம் செய்தார்களோ அந்த ராணியை, முடியை அகற்றினார்கள். எந்த அரசியல் திட்டத்துக்கு விசுவாசம் தெரிவித்தார்களோ அதை அழித்தார்கள் எந்தப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக சத்தியம் எடுத்தார்களோ அதை ஒழித்தார்கள்!

1970ம் ஆண்டு இவர்கள் செய்த விசுவாசப் பிரமாணப்படியா அந்த அரசியல் திட்டத்தை அழித்து அதற்கு மாறான — சட்டத்திற்கு விரோதமான இந்த அரசியல் திட்டத்தை கொண்டு வந்தார்கள். முடியை அகற்றுவோம், அரசியல் திட்டத்தை மாற்றுவோம், பாராளுமன்றத்தை ஒழிப்போம் என்று விசுவாசப் பிரமாணம் எடுத்தார்கள்? செய்த விசுவாசத்திற்கு முற்றிலும் மாறாகத்தானே அதை அழித்தார்கள்.

இப்படியிருக்கும் போது சுதந்திரம் வேண்டி போராடும் தமிழர் விசுவாசப் பிரமாணம் செய்தால் என்ன வந்து விட்டது. சுதந்திரப் போராட்டம் நின்று விட்டது என்று அர்த்தமா? பேரவையைப் பகிஷ்கரித்தால் சுதந்திரம் கிடைத்து விடுமா? எமது விரோதிகள் ஏகாதிபத்தியவாதிகள், அவர்கள் வால்பிடிகள் எல்லாம் சேர்ந்து தமிழர் விடுதலைக்கு அடைக்கும் சவப் பெட்டிதான் தேசியப் பேரவைப் பகிஷ்காரம்.

ஆகவே கட்டாயம் தமிழ் பா. உக்கள் தேசிய பேரவை செல்ல வேண்டும் விடுதலை வெள்ளம் கரைபுரண்டு ஓட வேண்டும். மிககுறுகிய காலத்தில்எமக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும்.

—தமிழ்த்தொண்டன்.

★

தேசிய அரசுப் பேரவையைப் பகிஷ்கரிப்பதும், பதவிகளைத் துறப்பதும் ஓர் விவேகமற்ற, முட்டாள்தனமான செய்கையென்றே கூறவேண்டும். அதிலும் குறிப்பாக எம். பிப் பதவிகளைத் துறப்பது படுமோசமான செயல் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

தமிழர் கூட்டணியின் எம். பீக்கள் பதவிகளைத் துறக்காதிருப்பதே விவேகமான, சிறந்த செயலாகும். பதவிகளைத்துறக்கவேண்டும் என்று கோருவோரும் இந் நிலைமைகளைச் சிந்தித்துப் பார்த்து தம் கோரிக்கைகளைக் கைவிட வேண்டும்; பதவிகளை துறக்காதிருக்கும் தமிழர் கூட்டணி முடிவை வரவேற்க வேண்டும்.

—எம். எல். எம். இக்பால்,
முஸ்லிம் தெரு,
யாழ்ப்பாணம்.

★

இன்றைய நிலையில் தமிழரசாரும், தமிழ் காங்கிரசாரும் தேசிய அரசுப் பேரவைக்குச்சென்று இன்றுள்ள எம் குறைகளையும், இனி மேல் எம்மைச் சூழும் குறைகளையும் உலகறியச் செய்ய வேண்டியதுதான் சாலச் சிறந்தது. இதை விடுத்துப் பதவியைத் துறப்பது பைத்தியத்தனமான தன்மையாகும். தமிழ் சமுதாயத்தின் ஏகப்பிரதிநிதியாய் நீங்கள் இருக்கும்போதே, தங்களுக்கு ஆமாப் போடும் சில ஆசாமிகளை ஆசனத்தில் அமர்த்தியும் (செ. குமாரசூரியர், எம். சி. சுப்பிரமணியம், அஸீஸ்) தங்களுடன் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் இனத் துரோகிகளுக்கு சில சலுகைகளைக் காட்டியும் சுகபோகங்களைக் கொடுத்தும் (ராசன் செல்வநாயகம், மாட்டின், தியாகராசா, அருளம்பலம், அப்துல் மஜீத்) அவர்கள் உதவியுடன் எம் இனத்தை அழிக்கத் திட்டமிடும் சிங்கள அரசாங்கம், நீங்கள் பதவி துறந்தால் என்ன செய்வார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

நீங்கள் பதவி துறப்பது தான் தாமதம் மறுநிமிடமே படுபாதகச் செயல்களில் இறங்கிவிடுவார்கள். அது மட்டுமல்ல நாட்டையே மாற்றினாலும் மாற்றுவார்கள். பின்னர் அவர்கள் நினைத்தது தான் சட்டம். அவர் செய்வதுதான் அரசியல் கொள்கை. அதற்கு ஆமா போட்டு தங்கள் பெயரையே மாற்றிக் கொண்டு சிங்கள இனமாக மாறிவிடுவார்கள் மேல் குறிப்பிட்ட தமிழ்த் துரோகிகள். அதன்பின் ஈழத்தில் தமிழ் இனம் என்றதோர் ஜாதிதான் வாழமுடியுமா?

அதுமட்டுமல்ல நீங்கள் பதவி துறக்கும் ஒவ்வொரு தொகுதிக்கும்தங்கள் சகாக்களை நியமித்து, அவர்கள் பெயரையும் மாற்றிக் கொண்டு சிங்கள அரசாங்கத்துடன் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருக்கச் செய்துவிடுவார்கள் அந்தப் பாதகர்கள்.

புத்தளம், இரத்தினபுரி, கெஸ்பாவ, நுவரெலியா முதலான தொகுதிகள் காலியாகி சுமார் 1 1/2 வருடங்களாயும் இன்னும் இடைத் தேர்தல்கள் நடக்கவில்லை என்றால், 13தேர்தல் தொகுதிகளும் காலியானால் அத் தொகுதிகளின் இடைத் தேர்தல்கள் நடக்க எத்தனை வருடங்களாகும் என்பதைக் கூறவும் வேண்டுமா? பின்னர் நாமே நம் கண்களைக் குத்திக் கெடுத்துக்கொண்டதாக முடியும். எனவே, நாம் நம் எதிர்ப்பை அரசியலாளரும், உலகமும் அறியச் செய்துவிட்டோம். இன்னமும் நம் எதிர்ப்பை தொடர்ந்து காட்டுவதானால் நீங்கள் 13 பேரும் தேசிய அரசியல் பேரவைக்குச் சென்றாக வேண்டும்.

வீம்புக்கும், வீறுப்புக்கும் பதவியைத் துறந்துவிட்டு தமிழ்பேசும் சமுதாயத்தை வீணர்களிடம் சிக்கவைப்பீர்களானால் அதனைப்போல் பாதகமான செயல் வேறொன்றும் இல்லை. எனவே மொத்தத்தில் இரு பகுதி எம். பீ, க்களும் தேசிய அரசியல் பேரவைக்குச் செல்வது என்று எடுத்த முடிவைத் தான் மலையகத் தமிழ் சமுதாயம் பெரிதும் விரும்புகின்றது.

—மலையகத் தமிழர் மக்கள் சார்பில்.

கே. ஈழத்து ராஜா.

★

தேசியப் பேரவைக்கு சென்று தமிழர் விடுதலைக் கோரிக்கைக்காக போராடுவது என்று தமிழர் கூட்டணி எடுத்துள்ள முடிவு விவேகமானதும் இராசதந்திரமிக்கதுமாகும். தமிழர் கூட்டணியின் முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

பி. கே. நாதன் ஏறாவூர், கே. சேகர் கல்முனை, வி. குணலிங்கம் கல்முனை கே. பி. நாதன் ஏறாவூர், வி. புலேந்திரன் கல்முனை, எஸ். கந்தசாமி கல்முனை, எம். ஆறுமுகம் கல்முனை, கே. கோபாலலிங்கம் கல்முனை, பாக்கியராசா அக்கரைபற்று கே. அமிர்தம் கல்முனை, எஸ். செல்வம் பாண்டிருப்பு, எஸ். விஜயகுமார் பாண்டிருப்பு, பி. சோமசுந்தரம் ஏறாவூர், எஸ். நடராசா ஏறாவூர், கே. சிருனான் ஏறாவூர்.

★

இன்றைய பத்திரிகைகளில் (25-6-72) எல்லாம் தமிழர் கூட்டு முன்னணியின் நடவடிக்கை குழு கூடி ஆலோசனை நடத்த இருந்த தமிழ் காங்கிரஸ் காரியாலயத்திற்கு முன்னால் அரசியல் அரிச்சுவடி தெரியாத மாற்றுக்கட்சி இளம் வாலிபர்கள் சில முன் கூட்டியே செய்யப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நடத்திய சில்லறை சேஷ்டைகளை பிரமாதப் படுத்தி செய்தி வெளியிட்டு தங்கள் சுயரூபத்தை காட்டின.

இந்த இளம் வாலிபர்கள் வெளியிட்ட பகிஷ்கரிப்பு துண்டுப் பிரசுரத்தில் கூட [illegible] கையில் அச்சிடப்பட்ட எழுத்துக்களே இடம்பெற்று இருந்தன. இதிலிருந்து இந்த சில்லறை முச்சந்தி கூட்டத்தினர் யார் எந்த கட்சியை சேர்ந்தவர்கள் என்று சொல்லாமலே எல்லோருக்கும் விளங்கும்.

இதை உணர்ந்துகொண்ட எங்கள் தலைவர்கள் அங்கு எதுவித அசம்பாவிதங்களும் இடம் பெறாமல் இருக்கும் பொருட்டு அந்த இடத்தை விட்டு அகன்று வேறொரு இடத்தில் கூட்டத்தை நடத்தியதில் என்ன தவறு இருக்க முடியும்? தமிழ் காங்கிரஸ் காரியாலயம் ஆனபடியால் அந்த சிறு கூட்டத்தினர் தப்பினார்கள். தமிழரசு கட்சி காரியாலயமாக அது இருந்திருந்தால் நிச்சயம் இந்த சில்லறை கூட்டத்தினரின் சில்லறை சேஷ்டைகள் இடம் பெற்று இருக்கவே மாட்டாது. ஆரம்பத்திலேயே அவர்களுடைய சேஷ்டைகள் முறி அடிக்கப் பட்டிருக்கும்.

இந்த சின்ன விஷயத்தை பிரமாதப்படுத்தி வெளியிடும் இதே பத்திரிகைகள் தான் சென்ற மாதம் 20ம் திகதி யாழ் நகர மண்டபத்தில் புதிய அரசியல் அமைப்பு சட்டத்துக்கு விசுவாசம் தெரிவித்து 4 மணிக்கே பூட்டிய கதவுகளுடனும், பொலிஸ் பாதுகாப்புடனும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியினரின் கூட்டம் நடந்தும் ஆரம்பத்திலிருந்தே பெரும் குழப்பத்துடனும் கூச்சலுடனும், அடிபிடிகளுடனும் கடைசியில் 18பேருடன் பெரும் தோல்வியில் முடிந்த கூட்டத்தைப் பற்றி பத்திரிகைகள் ஒன்றும் வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தன ஏன்? ஒன்றை பத்தாக்கி, பத்தை நூறாக்கி, அதை ஆயிரமாக்கி சந்தர்ப்பத்திற்கு ஏற்ப செய்திகள் வெளியிடும் ஈழத்து தினபதி, தினகரன் போன்ற பத்திரிகைகள் உலகத்தில் வேறு எந்த பகுதியிலும் காண முடியாததொன்று இதுதான் பத்திரிகை தர்மமா? அல்லது அக்கிரமமா? அநியாயமா?

தேசிய பேரவைக்கு அதன் உறுப்பினர்கள் தொடர்ந்து செல்வதென்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கை குழு எடுத்த முடிவை விடுதலை பற்றுள்ள ஒவ்வொரு சிந்திக்கும் ஆற்றல் படைத்த தன்மானத் தமிழனும் நிச்சயம் வரவேற்பான். மகிழ்ச்சி அடைவான். ஆனால் அதே நேரத்தில் அரசாங்க ஆதரவாளர்களுக்கும் தினபதி, தினகரன், விடுதலை போன்ற பச்சோந்தி பத்திரிகைகளுக்கும்— ஒரு மரண அடியாக தமிழர் கூட்டு முன்னணியினரின் முடிவு இருந்திருக்க வேண்டுமென்று நான் நம்புகிறேன்.

தமிழர் கூட்டு முன்னணி நடவடிக்கை குழுவில் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் மாத்திரம் உறுப்பினர்களாக இல்லை. அதில் பல கட்சிகள், நடுநிலையாளர்கள், அறிஞர்கள், இளைஞர்கள் எல்லாம் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் ஒன்று கூடி எடுத்த முடிவைத்தான் தேசிய பேரவை உறுப்பினர்கள், ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். யாரும் மாறாக நடக்கவில்லை. இவர்கள் எடுத்த முடிவு நிச்சயம் நம் எதிர்கால நன்மையை கருத்தில் கொண்டே எடுக்கப்பட்டிருக்கும் என்று நாம் நம்பி சுயநல கருத்துக்களுக்கு அறவே இடமில்லை என்ற எண்ணத்துடன் தலைவர்கள் மீது நம்பிக்கை வைத்து செயல்படவேண்டும்.

உண்மையில் தமிழரசு தலைவர்கள் பதவி ஆசை பிடித்தவர்களாக இருந்திருந்தால் 1965ம் ஆண்டே டட்லி அரசுடன் தமிழினத்தை முன்னைய தலைவர்கள் செய்ததுபோல அவர்களை சிங்களவருக்கு விற்று நான்கு மந்திரி பதவிகளும், பல சலுகைகளும் எடுத்து உல்லாசமாக காலம் கழித்திருக்க மாட்டார்களா? ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லையே. ஆகவே அவர்களை பதவிமோகம் கொண்டவர்கள் என்று சொல்லுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

இதை இன்றைய இளம் வாலிபர்கள் சிலர் ஏனோ உணர்ந்து கொள்ளவில்லை. போராட்டம் என்றால் தனிய வெளியே போராட்டம் நடத்துவதுதான் போராட்டம் மற்றவை எல்லாம் போராட்டம் இல்லை என்பது இவர்களுடைய இன்னுமொரு கருத்து.

எங்கள் தலைவர்கள் தேசிய பேரவைக்கு செல்லாவிட்டால் எங்கள் போராட்டம் இருட்டடிப்பு செய்யப்பட்டு, வெளி உலகத்திற்கு தெரியாமல் அரசாங்கம் சுலபமாக முறி அடித்து விடும் என்பதை இவர்கள் ஏனோ தெரிந்து கொள்ள மறுக்கிறார்கள். வீடு கட்டுவது கஷ்டம். உடைத்து சேதப்படுத்துவது சுலபம் எங்கள் பாதுகாப்புக்கென்று தலைவர்கள் கஷ்டப்பட்டு ஒரு வீட்டை கட்டிக்கொண்டிருக்கும் சமயத்தில் அதை இடை இடையே இடித்து சேதப் படுத்துவது போன்று இருப்பதுதான் பகிஷ்கரிப்பு திட்டம் என்பதை நாம் மறக்கக் கூடாது. இன்றைய நிலையில் இதனால் பயனே இல்லை.

கடைசியாக பத்திரிகைகளுக்கு ஒரு செய்தி. சென்ற கால டட்லி அரசுக்கு வால் பிடித்து உண்மையை மறைத்து மக்களை ஏமாற்றினீர்கள். ஆனால் என்ன நடந்தது? தேர்தலில் டட்லி மண் கவ்வினார். டட்லி ஆட்சிக்கு குழி பறித்ததுபோல் இந்த ஆட்சிக்கும் நீங்கள் குழிபறிக்க போகிறீர்கள் என்பதை மறவாதீர்கள். மக்களை ஏமாற்றிய காலம் மலை ஏறிவிட்டது.

—வி. ஆர். எஸ்
இணுவில்

கடந்தவார (25-6-72) "அரசியல் மடல்" தம்பிகளுக்கு சிந்தனைக்குரியதாக எழுதினீர்கள். நிச்சயமாக இன்னும் தம்பிகளின் உள்ளங்கள் குமுறியே கிடக்கின்றன. அவர்கள் பகிஷ்கரிப்பை விரும்பினர். ஆனாலும் தலைவர்கள் உணர்ச்சிகளுக்கு ஆளாகாமல் நன்றாக சிந்தித்து சிறந்ததொரு முடிவை எடுத்திருக்கிறார்கள். தந்தை செல்வா ஒரு தீர்க்கதரிசி, அதேபோன்று தனயர்களும் தீர்க்கதரிசனமான முடிவை எடுத்திருக்கிறார்கள். சந்தர்ப்ப, சூழ் நிலைகளுக்கேற்ப தகுந்த நேரத்தில் தகுந்த முடிவை எதிர்காலத்தில் எடுத்தால் நிச்சயம் தமிழினம் தான் இழந்த உரிமைகளை பெற்றுக்கொள்வதோடல்லாமல் தனக்கோர் நிலையும் பெறுவதில் தடையேதுமேற்படாது. எனவே அவர்கள் செய்த முடிவு, நாளை, தமிழுக்கு விடிவு என்பதை சாற்றுகிறது. இதில் சந்தேகமேயில்லை.

இனி வாலிபத் தோழர் குழாம் பாசறை அமைப்பதில் தீவிரம் காட்டட்டும்.

—பொன். யோகரத்தினம்
குடத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வட அயர்லாந்தில் கத்தோலிக்க மக்கள் நடத்திக்கொண்டிருக்கும் போராட்டத்திலும் சரி, முன்பு நடைபெற்ற அயரிஷ் விடுதலைப்போரிலும் சரி, பாராளுமன்றம் விடுதலைப்போராட்டத்தின் ஒரு களமாகவேபயன் படுத்தப்பட்டது; பயன்படுத்தப்படுகிறதே தவிர— பாராளுமன்றத்தை அவர்கள் பகிஷ்கரித்ததில்லை! பாராளுமன்றமும், விடுதலைப்போராட்டத்தில் பயன்படுத்தப்படவேண்டிய பலவேறு கருவிகளில் ஒன்று. அதை ஏன் ஈழத்தமிழர்கள் மட்டும் தூக்கி வீச வேண்டும்?

எங்கள் திட சித்தத்தினுலும் —விடுதலைப் பற்றுலும் சுதந்திர உணர்வினுலும் நிலைநாட்டப்பட வேண்டியதே இனவிடுதலை! வியர்வை, கண்ணீர், இரத்தம் சிந்தி—தியாகத் தீயில் குளித்து— உயிர்களைக் காணிக்கை தந்து—தனிமை இருட்சிறைக்குள் வாடி—வேண்டுமானுல் தூக்குமேடையிலும் ஏறி—தொல்லைகளையும் துன்பங்களையும் இன்முகத்துடன் ஏற்று — நிலைநாட்டப்படவேண்டியதே சுதந்திரம். என்ன விலை கொடுத்தெனினும் இனிய சுதந்திரத்தை பெற்றே தீருவோம் என்று உறுதிகொண்டு எழுந்துவிட்டனர் தமிழ் ஈழத்தின் தங்கநிகர் இளைஞர்கள். இந்த உணர்ச்சியும் எழுச்சியும் இனி துளியும் குன்ருது — மேலும் வளருமே தவிர!

"புதிய அரசியல் சட்டம் அமுல் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு எம்மால் எதுவும செய்ய முடியாது. இம் மாதம் 22ம் திகதியன்று (குடியரசு நாளில்) அமைதியைக் கடைப்பிடிப்போம் சமாதானமான முறையில் நடந்துகொள்வோம்.'

என்று சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. நவரத்தினம் (தினகரன் 17-5-72) அறிக்கை விடுத்தாராயினும்—உணர்ச்சியும் எழுச்சியும் துடிப்பும் மிக்க இளைஞர்களும் மாணவர்களும் ஒன்று திரண்டு தமிழர் கூட்டணியின் வேண்டுகோட்படி—மே 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களும் தமிழ் ஈழமடங்கணும் மிகப்பெரிய அளவில் ஹர்த்தால் நடத்தி கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு—பாடசாலைகளைப் பகிஷ்கரித்து—அரசியல் சட்டத்துக்கு தமிழினத்தின் வலிமையான உக்கிரமான ஒன்றுபட்ட எதிர்ப்பை எடுத்துக்காட்டினர். ''எம்மால் ஏதும் ஆகாது'' என்று திரு. நவரத்தினத்தைப் போல சோர்ந்து விடவில்லை எம் இளம் மாணவ சமுதாயம்!

அத்தகைய வீரத் தமிழ் இளைஞர்கள் பாராளுமன்றத்துக்கு செல்வது என்ற தமிழர் கூட்டணியின் முடிவுகேட்டு சோர்ந்து விடுவார்கள்; ஓய்ந்து விடுவார்கள் என்கின்ற கருத்தை நான் துளியும் ஏற்க மாட்டேன்!

ஏனெனில், நம்முடைய இளைஞர்களின் உள்ளங்களில் மூண்டிருக்கும் விடுதலைத் தீ அத்தனை சீக்கிரத்தில் அணைந்து விடக்கூடிய தீயல்ல—அது அணையாத் தீ! யாராலும் அணைக்க முடியாத தீ! தமிழ் ஈழம் விடுதலை பெறுமட்டும் கனன்று கொண்டிருக்கப் போகின்ற சுதந்திரத் தீ! அந்தத் தீ—விடுதலைவேகம்—அணைந்து விடுமெனக் கூறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்—மாணவர்கள், இளைஞர்களின் உணர்ச்சியையும் ஆற்றலையும் குறைத்து மதிப்பிடுபவர்கள் என்றே நான்கூறுவேன்!

எனவே வீறுகொண்டெழுந்த இளம் தமிழர் சமுதாயம் அடுத்துவரவிருக்கும விடுதலைப் போருக்கு தயாராகிட வேண்டும். இதுவே இன்று நம்முன் உள்ளபணி.

தமிழர் கூட்டணிக்கு மேலும் வலிவு சேர்த்து—விடுதலைப் போராட்டத்தை பொலிவுடன் நடத்திட கூட்டணிக்கு வெளியே நிற்கும் விடுதலை உணர்வுள்ளவர்களையும் இணையுங்கள் கூட்டணியில் என்று அழைக்கிறேன்! அதே சமயத்தில் கூட்டணிக்குள் இணைந்தவர்கள் அனைவரும் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டியதும் மிக அவசியமாகும்! வெளிப் பகையைவிட உட்பகை ஆபத்தானது என்பதையும் மனதில் வைத்திருக்கவேண்டும்!

எமது மொழியும் இனமும் தலைநிமிர்ந்து வாழவேண்டும்—தமிழ் ஈழம் விடுதலை பெறவேண்டும் என்று உள்ளபடியே விரும்புகின்றவர்கள் யாரும் இனிப் பிரிந்து நின்றிடத் தேவையில்லை! கூட்டணியில் இணைந்து நின்று விடுதலை வேள்வியில் குதித்திடுவோம் வாரீர் என்று அழைக்கிறேன்.

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

# ஈழத் தமிழர்களின் இன்றைய....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லே எந்த விதமான தொடர்பும் இல்லை; விரும்பினுல் உங்கள் அரசியல் சாசனத்தை நீங்கள் உங்கள் மக்களுக்கு வைத்துக்கொள்ளுங்கள் நாங்கள் எங்களுக்கென்று புறம்பான ஒரு சாசனத்தை ஒரு அரசியல் சட்டத்தை வைத்துக்கொண்டு நாங்கள் எங்களுடைய நிருவாகத்தை நடத்துவோம் என்ற முடிவைத்தான் நாங்கள் எடுத்திருக்க வேண்டும்.

ஆனுல், அதுதான் தமிழ்ப் பகுதியிலே வாழுகின்ற 90 சத விகிதத்திற்கதிகமான மக்களின் கருத்தாக இருந்தாலும் அப்படிப்பட்ட ஒரு நிலையை யுத்த முனையிலே ஏற்படுத்தலாமே யொழிய வேறு எந்த வகையிலும் ஏற்படுத்த முடியாதென்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே, நாங்கள் விரும்பினுலென்ன விரும்பாவிட்டாலென்ன நாங்கள் தொடர்ந்து எங்கள் அரசியல் போராட்டத்தை நடாத்தி இந்த நாட்டிலே எமது அடிப்படை உரிமைகளை பெறுவதற்கு இந்தச் சாசனத்தின் கீழ் வாழ்ந்துதான் — இந்தச் சாசனத்தின் கீழ் இருந்துதான் நாம் எமது உரிமைக்காகப் போராட முடியும்.

அந்த அடிப்படையில்தான் அந்த சாசனத்தை எதிர்க்கும் ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் தங்களுக்கு எவ்வளவு வெறுப்பாக இருந்தாலும் ''இந்த சாசனத்திற்கு நாம் விசுவாசமாக இருப்போம்'' என்று கூறி தொடர்ந்து வேலையில் இருக்கிருர்கள். 'இந்த சாசனத்தை எதிர்ப்போம், இந்த சாசனத்தை எதிர்த்து நாம் ஒரு தனி நாடு அமைப்போம்'' என்று கூறும் இயக்கத்தைச் சேர்ந்த நியாய துரந்தரர்களும் நியாயவாதிகளும் இந்த சாசனத்தின் கீழ் விசுவாசப் பிரமாணம் எடுத்து தங்கள் கடமைகளைப் பார்க்கின்ருர்கள்.

ஆகவே, நான் எதைக் கூறுகிறேன் என்ருல் நாம் உடனடியாகப் போர்முனையிலே தனி நாடு பெற முடியாது. நாம் தனி நாடென்றை நிலைநாட்டக்கூடிய நிலைமை எய்தும் வரை இந்த சாசனத்தின் கீழ் இருந்துதான் இயங்க வேண்டிய நிலை இருக்கின்றது.

இந்த அடிப்படையில் தான் தமிழர் கூட்டணியைச் சேர்ந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இநதப் பேரவையிலே அங்கம் வகிக்க வேண்டுமா, அல்லது தமது ஆசனங்களை இராஜிஞமாச் செய்ய வேண்டுமா, அல்லது பேரவையைத் தொடர்ந்து பகிஷ்கரித்து தங்கள் ஆசனங்களை இழக்க வேண்டுமா அதன் பின்னர் அவற்றுக்காக நடக்கும் தேர்தலில் போட்டியிட வேண்டுமா என்று ஆராய வேண்டி இருந்தது.

எங்கள் பிரதிநிதித்துவத்தை நாம் ஒரு புறம்பான பிரச்சினையாகக் கருதி தர்க்கரீதியான முடிவுக்கு வரமுடியாது. எமது இயக்கத்தையும் எமது போராட்டத்திலே ஓர் அம்சமாகக் கருதி நாம் எமது உரிமைகளைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு நாம் இராஜிஞமாச் செய்தால் என்ன, பகிஷ்கரித்தால் என்ன, இனிமேலும் இந்தப் பேரவையிலே தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் தேவையா என்று தீர்[illegible] அந்த [illegible] அம்சமாகத்தான் எங்கள் செயலும் அமையவேண்டி இருந்தது.

இறுதியில் மிகவும் மோசமான நிலை ஏற்பட்டவுடன்தான் இவ்வளவு காலமும் இல்லாத ஒரு புதிய சூழ்நிலை தமிழ் மக்கள் மத்தியிலே ஏற்பட்டது. பல காலமாக பல காரணங்களுக்காக வேற்றுமைப்பட்டிருந்த எத்தனையோ அரசியல் இயக்கங்கள், இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் சார்பிலே பேசக்கூடியவர்கள், ஆகக் குறைந்தபட்சம் தமிழ் மக்களின் 90 சத வீதத்துக்கு மேற்பட்டவர்களின் சார்பிலே பேசக்கூடிய தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தார்கள்.

குடியுரிமை மறுக்கப்பட்ட மலைநாட்டுத் தமிழ் மக்களின் நம்பிக்கையான ஸ்தாபனமாகிய—அவர்களின் கருத்தையும் உரிமைக் குரலையும் பிரதிபலிக்கக்கூடிய ஸ்தாபனமாகிய — இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், சென்ற தேர்தலிலே விசேடமாக வட மாகாணத்திலே தமிழ் மக்களுடைய வாக்குகளிலே 95 சத வீதத்தைப் பெற்ற — வட்டுக்கோட்டை, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகள் உட்பட — தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் மிகவும் அனுபவம் வாய்ந்த திருவாளர் சுந்தரலிங்கம் உட்பட இன்னும் எத்தனையோ தொழிற் சங்கங்களும் சேர்ந்து ஒன்றுபட்டு எமது உரிமையைப் பெற ஒற்றுமையாகப் பொதுத் திட்டம் தீட்டவேண்டுமென்று தீர்மானித்தனர்.

அவர்கள் எல்லாச் சூழ்நிலையையும் நன்ருக ஆராய்ந்து எமது உரியைப் போராட்டத்தை எப்படி நடத்த வேண்டும் என்று ஓரளவிலே திட்டம் போட்டு அந்தத் திட்டத்தை நடைமுறையிற் கொண்டுவர, அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க இந்த மேடை தேவையா, அந்தத் திட்டத்தைச் செயலாற்றும் தலைவர்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற அந்தஸ்துத் தேவையா என்பனவற்றை அலசி ஆராய்ந்து இறுதியில் அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க இந்த மேடையும் அந்த அந்தஸ்தும் மிகவும் முக்கியமானவை என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இந்த நேரத்திலே உப சபாநாயகரவர்களே, தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்ப்பை முறியடிக்க வேண்டுமானுல் அந்தத்தமிழ் மக்களுடைய அரசியல் இயக்கத்தை நடத்துகிற தலைவர்களுடைய செல்வாக்கைக் குறைக்கவேண்டும்; தமிழ் மக்களுடைய அரசியல்இயக்கத்தை நடத்துகிற தலைவர்களிலே தமிழ் மக்கள் நம்பிக்கையினைப் படக்கூடிய அளவுக்கு கருத்துக்கள் தெரிவிக்கப்படவேண்டும் என்ற பழைய காலத் திட்டத்தை எத்தனையோ பேர்கள் இப்பொழுது பிரயோசனப்படுத்துகிருர்கள். நடைமுறைப் படுத்துகிருர்கள்.

''தமிழ் மக்கள் ஏன் கோபிக்கவேண்டும்? இந்தப் புதிய சாசனத்தில் அவர்களுக்கு வேண்டிய அளவு உரிமை இருக்கிறதுதானே'' என்று திட்டமிட்டுச் செய்திகளைப் பரப்புகிற பத்திரிகைகள், அதே பக்கத்திலே தமிழ் இளைஞர்கள் மத்தியிலே ஒரு சிலருடைய கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ்த் தலைவர்களுடைய செல்வாக்கை தமிழ் இளைஞர்கள் மத்தியிலே குறைப்பதற்கு முயற்சியெடுக்கிருர்கள்.

அதே நேரத்திலே இந்தப் பத்திரிகைகளாலே ஏற்படுத்தப்பட்ட ஒரு குழப்ப நிலையைப் பிரயோசனப்படுத்தி, ஒருசில இளைஞர்கள் மத்தியிலே இருக்கிற உணர்ச்சியைப் பிரயோசனப்படுத்தி, தாங்கள் அரசியல் செல்வாக்குப் பெறலாம் என்று ஒரு சிறிய கோஷ்டி சதித்திட்டமிட்டு சில கருத்துக்களைப் பரப்பிக்கொண்டுவருகிறது.

எனவே, இந்தநேரத்திலே தமிழ் மக்களுக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் தேவையா அல்லவா என்று தீர்மானிப்பது இத்திட்டத்துக்கு பொறுப்பானவர்களுடைய பொறுப்பே தவிர திட்டத்தை முறியடிக்கமுனைகின்ற சில பத்திரிகைகளுடையதோ அல்லது இந்தச் சூழ்நிலையில் தங்கள் செல்வாக்கைப் பெறலாம் என்று கருதுகிறவர்களுடையதோ அல்ல.

தமிழ் மக்களுடைய உரிமைகளிலே அக்கறை கொண்ட அத்தனைபேரும் தமிழர் ஒற்றுமை முன்னணிக்கு எந்தக் காலத்திலும் கருத்துக்கள் தெரிவிக்கலாம். முன்னணிக்கு நேரடியாகவோ அல்லது வேறு வழியிலோ நல்ல கருத்துக்களைத் தெரிவித்து நாம் பாராளுமன்றத்திலிருந்து நீங்குவதுதான் ஒரு புதிய திட்டத்தின் அம்சமாக இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு முன்னணி வந்தால், முன்னணி எந்தக்காலத்திலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும். (பேச்சின் ஏனைய பகுதிகள் அடுத்த வாரம் இடம் பெறும்.)

---

## கூட்டம் கலைந்தது!

வல்வை மகளிர் வித்தியாலயத்தில் சிங்களம் போதிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்வதற்காக கூட்டப்பட்ட கூட்டம், வல்வை வாலிபர்களின் எதிர்ப்பினுல் எதுவித முடிவும் எடுக்கப்படாமலே கலைக்கப்பட்டது.

**மில்க்வைற் சோப் பாவிப்பாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!**

மில்க்வைற் தயாரிப்புகளை உங்கள் வாடிக்கைக் கடைகளில் வாங்கும் பொழுது அவற்றின் மேலுறைகளைக் கவனித்து மேலுறைகளுடனேயே கேட்டு வாங்குங்கள். மேலுறைகளைச் சேகரித்து, மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் காரியாலயத்தில் அல்லது யாழ்ப்பாணம் மக்கள் நவீன சந்தையில் அமைந்திருக்கும் எமது 11ம் இலக்க காட்சிசாலையில் அல்லது தபாலில் அனுப்பி பரிசுப்பொருட்களைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

அதிபர்,
மில்க் வைற்சோப் தொழிற்சாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கருத்து:

# தமிழர் கூட்டணியின் முடிவு தீர்க்க தரிசனம் நிறைந்தது!

அன்பின் அண்ணன் கோவைக்கு,

சென்ற 25ம் தேதி தமிழர் கூட்டணி எடுத்த முடிவு மிகவும் விவேகமானதும்— தீர்க்கதரிசனமான முடிவும் ஆகும். மாணவர்களில் பெரும்பாலோர் தமிழர் கூட்டணி பிரதிநிதிகள் தேசிய அரசுப் பேரவையைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று கேட்டதாக பரவலான வதந்தி அடிபடுகிறது;

ஆனல் அன்று காங்கிரஸ் காரியாலத்தின்முன் நின்ற மாணவர்களில் ஒருவன் என்ற முறையில் கூறுகிறேன். அன்று அங்கு நின்ற பலர் தமிழர் கூட்டணியே தேவையில்லை என்று கூறுபவர்களாக— வேண்டுமென்றே தமிழர் கூட்டணியினை உடைத்தெறியும் கருத்துடையவர்களாக இருந்தனரே தவிர உண்மையில் தமிழினத்தின் நலனை நோக்கும் மாணவர்கள் மிகச் சிலரே இருந்தனர். மிகுதிப் பேருடைய கருத்துக்களை அவதானித்தபோது அவர்கள் எல்லாரும் 'உளவு' பார்க்க அனுப்பப்பட்டவர்களாகவே நான் கருதுகிறேன்.

பண்டிதர் கா.பொ. இரத்தினம் எவ்வளவு அழகாக— தர்க்கரீதியான விளக்கம் கொடுத்தார். ஆனல் அங்கு கூடியிருந்த சிலர் அவற்றை ஏற்க மறுத்து தாம்பிடித்த முயலுக்கு மூன்று கால் என்னும் நிலையிலேயே இருந்தனர்.

மூன்று மாதத்தில் எமது உரிமைகள் எல்லாம் கிடைக்கும் உங்கள் பதவிகளை இராஜினமாச் செய்யுங்கள் என்று சிலர் கூறியபோது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நான்கு பிரதிநிதிகள் குடியரசுக்கு ஆதரவு தெரிவித்து ஒப்பம் இட்டபோது தடுக்க முடியாது போனவர்கள் 3 மாதத்தில் உரிமை பெறலாம் என்று சொன்னல் யார்தான் நம்புவார்கள்.

உண்மையைச் சொல்லப் போனல் தமிழினத்தின் நலனில் அக்கறையுள்ள மாணவர்கள் அனைவரும் தேசிய பேரவைக்குச் செல்வதால் தான் நன்மை என்று கூறுவார்களே தவிர பகிஷ்கரிப்பால் நன்மை என்று கூற மாட்டார்கள்!

போதிய திட்டம் எதுவும் இல்லாது பலாத்கார வழியைக் கைக்கொண்டால் இன்று சிறையில் வாடும் பயங்கரவாதிகள் நிலைமை தான் நமக்கும் ஏற்படும். முப்பது இலட்சம் தமிழர்களும் வீணை அழியவேண்டித்தான் ஏற்படும். போதிய வெளிநாட்டு ஆதரவு-உதவிகளை நாம் பெற்றுக்கொண்டதன் பின்பே எமது போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். அதுவரையும் சாத்வீகமுறையிலே இயலும் என்ற மட்டும் நாடாளுமன்றத்திலே எமது நிலையை எடுத்துக்கூறுவதன் மூலம் உலக நாடுகளின் பேராதரவை திரட்டவேண்டும். இதுவே ஆயுத பலம்—குறைந்த தமிழினத்துக்கு வழி! அதைவிடுத்து தவருன அவசரமான முடிவுகளை எடுத்து வீணை எமது இனத்தை அழிக்காது தலைவர்கள் இடும் கட்டளையை - தமிழர் கூட்டணியை பலப்படுத்தி எமக்கிடையேயுள்ள விரோதிகளை—காக்கை வன்னியர்களை முதலில் அப்புறப்படுத்துவோம். இந்தச் சமயத்தில்தான் எமக்கு பிரச்சாரத்துக்கென நாளேடு ஒன்று வேண்டும். சுதந்திரன் தினசரிப் பத்திரிகையாக வருவதன் மூலமே தினபதி-தினகரன் போன்ற தமிழர் விரோத பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்கமுடியும்.

வாழ்க தமிழர் கூட்டணி.

இப்படிக்கு,

**ப. சோமசுந்தரம்**

க. பொ. த. உயர்தரவகுப்பு
ஸ்கந்தவரோதயா கல்லூரி,
சுன்னுகம்.

•

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களிடம் தேவைப்படுவது நிதானமே. அவசரப்பட்டு போராட்டங்களில் இறங்காமல் திட்டம் போட்டு எமது எதிர்ப்பியக்கங்கள் இயங்கவேண்டும், சில வாலிபர்கள் நினைப்பது போல உடனடியாக நமது போராட்டத்தைத்தொடங்கினுல் அது சிறிது காலத்தில் பிசுபிசுத்துப் போய்விடும்.

ஆகவே தமிழ்த் தலைவர்கள் (கூட்டணி) செய்த முடிவே சரியெனப்படுகிறது. தலைவர்களின் ஆணைப்படி நடப்பதே இப்போதைய தமிழ் இளைஞர்களுக்கு நன்று. தமிழ் தலைவர்கள் பொறுப்புணர்ச்சி உள்ளவர்கள்.

சிங்கள வாலிபர்களைப் பலாத்காரத்தில் ஏவிவிட்டு அவர்கள் கஷ்டப்படும் பொழுது தலைவர்கள் ஒதுங்கிக்கொண்டார்கள். தமிழ்த் தலைவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பதைத் தமிழ் இளைஞர்கள் உணரவேண்டும்.

—ரி. குமாரசாமி.
கொழும்பு-10.

★

இன்று ஈழத் தமிழ் நாட்டில்விடுதலை உணர்ச்சியால் உந்தப்பட்டு இனமொழி உரிமைபெற வீறுகொண்டு எழுந்து நிற்கும் வாலிப நண்பர்கள் தமிழ் பிரதிநிதிகள் (நாடாளுமன்றத்தை) தேசிய பேரவையை நிராகரித்து பதவிகளைத் துறக்க வேண்டுமென்று கூறுகின்றனர். அவர்கள் கூறுவதிலும் நியாயம்உண்டு. இந்தநேரத்திலே அறிவில்முதிர்ந்த அனுபவசாலிகள் பலர் பாராளுமன்றத்தை (தேசிய பேரவையை) தற்சமயம் நிராகரிப்பதால் பயன் இல்லை செல்லவேண்டும் என்று கூறுகின்றனர். இவர்கள் கூறுவதிலும் நியாயம் உண்டு.

இப்படியான இரு கருத்துக்கள் நிலவும் நேரத்தில் சென்ற வார சுதந்திரன் இதழிலே அரசியல் மடலிலே அண்ணன் கோவை கூறியவற்றை எமது தமிழ் மக்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

ஈழத் தமிழகத் தொகுதிகள் எல்லாம் தமிழர் கூட்டணியினர் கைக்குவரவேண்டும் அதன்பின் தேசிய அரசு பேரவையை பகிஷ்கரிக்கும் முடிவை மேற்கொள்ளலாம் என்பதே எமது கருத்துமாகும்.

அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்து அடிநக்கி வாழும் அறிவிலிகள் தமது ஸ்தானங்களை காலிசெய்து தங்கள் கொள்கையை தமிழ் மக்கள் ஆதரிக்கிருர்களா என அறிய முற்பட்டால் (இது நடவாத காரியம்) எமது கூட்டணியினரும் தமது ஸ்தாபனங்களை காலி செய்து மீண்டும் தேர்தலுக்கு நின்று தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை அரசினருக்கு உணர்த்தலாம்.

இத்தருணத்திலே 25.6.72ல் கூடிய தமிழர் ஒற்றுமை முன்னணியினர் தேசிய பேரவைக்கு தமிழ் பிரதிநிதிகள் செல்லவேண்டும் பேரவையின் உள்ளேயும் வெளியேயும் தமிழ்மக்களின் உரிமைப்போரை நடத்தவேண்டும் என்று தீர்மானித்தது மிகவும் விவேகமானதாகும். இம்முடிவை போற்றுபவர் போற்றட்டும் தூற்றுபவர் தூற்றட்டும் காலம்வரும் வரை தமிழ் மக்களின் சுதந்திர உணர்ச்சியை குறிப்பாக இனமொழி மத உரிமைபெற வீறுகொண்டு எழுந்து நிற்கும் வாலிப நண்பர்களின். சுதந்திர உணர்ச்சியை குன்றவிடாது பாதுகாத்திட தமிழர் கூட்டணியினர் சிந்தித்து ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும்.

எமது இளம் வாலிபத் தோழர்களும் தமிழர் ஒற்றுமை முன்னணியினரின் முடிவை ஏற்று அதன்படி செயல்படவேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கினல் அனைவருக்கும் தாழ்வு.

—குரும்பசிட்டி கந்தையன்;

## அ. எ. வி. சங்கம் மன்னர் கிளை வரவேற்பு!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மன்னர்க் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 28.6.72ம் திகதி தலைவர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

''தேசிய அரசப் பேரவையில் பங்குபற்றி தமிழ் உரிமைகள் அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்யும் எண்ணத்துடன் தேசிய அரசப் பேரவைக்குச் செல்ல வேண்டுமெனத் தமிழர் கூட்டணி தீர்மானித்திருப்பதை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மன்னர்க் கிளை பாராட்டுவதுடன் தமிழர்கள் உரிமை விடயத்திலும் சிறப்பாகத் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர் விடயத்திலும் மிகவும் நிதானமாகச் செயல்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது.''

கீழ்க்கண்டோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்—திரு. இ. கிருஷ்ணபிள்ளை, உபதலைவர்கள் — திரு. ச. இரத்தினராசா, திரு. மு. அருந்தவராசா, செயலாளர் — திரு. ச. சின்னத்துரை, பொருளாளர் — திரு. வே. செல்வநாயகம், செயற்குழு உறுப்பினர்கள்:- திருவாளர்கள் வ. யேசுரத்தினம், ஊ. கி. லெம்பேட், சி. சின்னையா, ச. அ. துரைநாயகம், வே. பரமநாதபிள்ளை, அ. வேதநாயகம், திருமதி. ம. பி. சே. ரேூச்.

# சுயாட்சிக் கழகத்தின் சுயநலப்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகப் பின்பற்றியிருப்பார்களே. விடுதலை வேட்புக் குழுவின் அந்தரங்க எண்ணம்தான் என்னவோ!

### சுயாட்சிக் கழகத்தின் சதி

பச்சையாகக் கூறினல் சுயாட்சிக் கழகம் தனது எதிரியாகிய தமிழ் அரசுக் கட்சியை வேரறுக்கக் கங்கணம் கட்டி நிற்கிறது. அதுதான் யாக்கோவின் குரலில் மக்கள் சார்பில் பேசுவதாய் மக்கள் பிரதிநிதிகளுக்கு அறைகூவல் விடுக்கிறது. கொழும்பிலுள்ள மாணவர்கள் சிலரின் கையொப்பங்கள் முப்பது இலட்சம் தமிழர்களின் எண்ணத்தைப் புலப்படுத்த முடியுமா?

அரசியல் சாசனத்தில் கையொப்பமிட்ட ஆறு தமிழரை மக்கள் என்ன செய்தார்கள்?

தமிழ்த்துரோகிகளான அவர்களையும், அவர்கள் நண்பர்களையும் பூரணமாகப் பகிஷ்கரிக்கலாமே. அவர்களோடு பேசாமல், கூடாமல், வீடுகளுக்குப் போகாமல், சலவைத் தொழிலாளி அழுக்கு எடுக்கப் போகாமல், சவரத் தொழிலாளி சவரஞ் செய்யப் போகாமல், மனைவி மக்களோடு உறவாடாமல் தொகுதியிலுள்ள மக்களும் ஏனைய மக்களும் பகிஷ்கரிக்கமுடியாதா? அவர்கள் உதவியால் மக்களோடு தொடர்புடைய ஆசிரியத் தொழில் பெற்ற ஆசிரியர்களையும், கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தரையும் உபதபாலதிகளையும், நன்கு பகிஷ்கரிக்கலாமே.

இவையெல்லாவற்றையும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் தான் திட்டித்தரவேண்டுமா? விடுதலை வேட்கையுள்ள சுயாட்சிக் கழகம் எங்கே போய்விட்டது? வேண்டாத பிரசுரங்களை வெளியிடுவதுதானு வீரம்? பயன்தரக்கூடிய (Positive) செயல்களில் ஈடுபடுவதை விடுத்து அழிவுக்குரிய (Negative) செயல்களுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தூண்டி நிற்பதேன்?

### பதவியில் ஒட்டியிருந்தார்!

சுயாட்சிக் கழகத் தலைவர் பதவி துறக்கவேண்டிய காலத்தில் ஒட்டிக்கொண்டிருந்தார். ஞாலத்தை இழந்தார். அவர் அப்படிச்செய்திருப்பின் தமிழரசுக்கட்சியின் வரலாறு திசைதிரும்பியிருக்கும்.

தனக்கு மூக்குப் போனுலும் சத்துராதிக்குச் சகுனப்பிழையானுல் போதும் என்ற கொள்கையில் நடந்துகொள்வது கவுரவமானதா? யாருக்குத் திட்டந் தேவை. தீட்டித்தருகிறேன். செயற்படுத்த வீரர்களைத் தருவீர்களா? எனது திட்டங்களோ சாத்வீகமானவை, சுயநல மறுப்புடன் கூடியவை. • அரசாங்கத்தோடு தொடர்பற்றவை. முதலில் நம்மைப் புனிதப் படுத்துபவை.

### வரண்ட மூளை

பாத யாத்திரை, தபால் முத்திரை முதலியவற்றைக் கண்ட மூளைகள் வரண்ட பகிஷ்கரிப்பில் வெற்றியைக் காணலாம் என நினைப்பது வியப்பாயிருக்கிறது. சுயாட்சிக் கழகத் தலைவர், என்று தேர்தலில் தோற்ருரோ அன்று முதல் தமது மாற்ருர் பாராளுமன்றத்திலோ, தேசிய அரசுப் பேரவையிலோ இருப்பதைக் காண அவருக்கு வயிறு பற்றி எரிகிறது. காவலூர்த் தொகுதி மக்களைத் திட்டினரே! பின் வெளியேறுங்கள் என்ற பல்லவியை வெவ்வேறு இராகத்தில் பாடி வருகிருர். அவரோடு போட்டியிட்ட பண்டிதரை 'விடுதலை' அளவுக்கு அதிகம் சாடுவது இதை நிரூபிக்கிறது.

### நல்ல நியாயமில்லை

தமிழ்த் தலைவர்கள் தேசியப் பேரவையிலிருந்து வெளியேற எந்தவித நல்ல நியாயமுமில்லை. அரசியல் சாசனத்துக்கு எதிராகப் போராடி தண்டனை பெறலாம். அரசியல் சட்டத்தையும் சட்டசபைகளையும் கோடுகளையும் அவமதிப்பதால் உரிமைப் பிரச்சினைகளும் தண்டனைகளும் உண்டு. ஆனல் குடியாட்சியில் குடிகள் அவமதிக்கப்படும்போது அதற்குத் தண்டனை கிடையாது. அவ்வாறு அவமதிப்பது பிறப்புரிமையாகவும் அரசியல் சுதந்திரமாகவும் மாறிவிடுகிறது. என்ன செய்யலாம்? விடுதலைக்குப் போராடுகிறவர்கள் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழராயிருக்க முடியாது.

### நவத்தின் நயவஞ்சகம்

விடுதலை வேட்புக்குழு, தமிழ்ப் பிரதிநிதிகள் பேரவையிலிருந்தல்ல, வெளியே நின்று போராட வேண்டுமென்றும் கேட்கிறது. அப்படியாயின் விடுதலை வேட்புக் குழுவைச் சேர்ந்தவர்களே முதலில் பதவியிழந்த தமிழ்ப் பிரதிநிதிகளுக்குக் குழிபறிப்பர்.

**இந்தப் பகிஷ்கார இயக்கம் சில பிரதிநிதிகளை மறுபடியும் தேசிய பேரவைக்குச் செல்லவிடாது தடுப்பதையே அந்தரங்க நோக்கமாகக்கொண்டது. பண்டிதரைப் பழிவாங்குவதே திட்டம். மக்களின் நன்மையின் பொருட்டுப் பிறந்ததல்ல.**

நான் முன்னர் பகிஷ்கரிப்பை இலகுவான வேறு முறைகளில் (mild forms) காட்டலாம் எனக் கருதியிருந்தேன். அடையாளமாக ஒருவர் பதவி துறப்பது அல்லது தேசியப்பேரவை விவாதங்களில் கலந்துகொள்ளாமல் மூன்று மாதத்துக்கு ஒருமுறை போய் வருவது போன்றமுறைகளைக் கையாளலாம் என எண்ணினேன். ஆனல் இப்பிரசுரத்தைக் கண்டபின் முற்ருகப் பகிஷ்கரிக்கக்கூடாது என்னும் முடிவுக்கு வந்திருக்கிறேன். சிவத்தின் கயமையை மன்னித்தாலும் நவத்தின் நயவஞ்சகத்துக்கு நாணுகின்றேன்.

பிரதிநிதிகள் சுயநலத்துத்தாக அல்ல மக்களின் நலத்துக்காகத் தேசிய பேரவைக்குப் போகவேண்டும்; மக்களின் வாக்கெடுப்புக்கு விட்டால் எமது கட்சியே வெற்றிபெறும். விடுதலை வேட்புக் குழுவுக்கு இருக்கும் வேட்கையிலும் எமக்கு நிரம்பிய விடுதலைத்தாகம் உண்டு. ''ஞாலம் கருதினும் கைகூடும் காலங் கருதி இடத்தாற் செயின்''.

சுயாட்சிக் கழகம் பிற தமிழ்க் கட்சிகளை விசேஷமாகத் தமிழரசுக் கட்சியைச் சதா திட்டிக்கொண்டிருப்பதால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்யமுடியாது. முடிந்தால் ஆக்கந்தரும் பல செயல்களில் ஈடுபட்டு மக்களைக் கவர்ந்து தமிழரசுக் கட்சியை முன் [illegible] செய்யப்படும். சாணக்கிய தந்திரங்கள் பயன்தரமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (18)

## யார் இந்த ஈழத்து அடிகள்?



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

**கோவை-மகேசன்**

தமிழ் நாட்டின் வரலாற்றில் காஞ்சிபுரத்துக்கு எப்பொழுதுமே தனியிடம் உண்டு. பல்லவ மன்னர்களின் ஆட்சியின்போது தலைநகராக விளங்கிப் பெருமை பெற்றது காஞ்சிபுரம்.

ஆதியில் காஞ்சிபுரத்தின் பெயர், கச்சி, காஞ்சி என வழங்கி வந்திருக்கிறது. பிற்காலத்தில் புரம் என்பது காஞ்சியோடு சேர்ந்து காஞ்சிபுரம் ஆயிற்று.

தொண்டை நாடு பழங் காலத்தில் இருபத்து நான்கு கோட்டங்களாக இருந்தன. அவற்றுள் ஒன்று எயில் கோட்டம். அதில் காஞ்சி மாநகரும் இருந்ததால், அதனை எயிற்பதி என்றும் புலவர் கூறுவர். இங்கு ஆண்ட பல்லவ மன்னர் பெயரில் அமைந்த ஊர்கள் பல்லவபுரம் என அழைக்கப் பட்டன. அவை இன்று பல்லாவரம் என்று அழைக்கப் படுகின்றன.

இத்தகைய சீரும் சிறப்பும் பழம் பெருமையும் மிக்க காஞ்சிபுரம், சைவமும் தமிழும் வளர்க்கும் தொட்டிலாகவும், அதே சமயத்தில் பகுத்தறிவு ஊற்றின் மூலத்தானமாகவும் விளங்கியிருக்கிறது; இன்றும் விளங்கி வருகிறது.

கந்தபுராணத்தை பாடிய கச்சியப்பர் தோன்றிய பூமியும் காஞ்சிதான். புராண இதிகாசங்களிலுள்ள மூட நம்பிக்கைகளைத் துடைத்தெறிய தோன்றிய பகுத்தறிவுக்காவலன் பேரறிஞர் அண்ணா பிறந்த மண்ணும் காஞ்சிபுரம்தான்.

நூற்றுக்கு மேற்பட்ட சைவ ஆலயங்களுக்கும், வைஷ்ணுவ ஆலயங்களுக்கும் உறைவிடமான காஞ்சிபுரத்தில்தான் மதங்களின் பெயரால் நடைபெற்று வந்த அனுச்சாரங்களையும் மூடநம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்த சுயமரியாதை வீரரான பேரறிஞர் அண்ணா பிறந்தார்.

காஞ்சிக்கு வரலாற்றில் இதற்கு முன் எத்தனை சிறப்புக்கள் இருப்பினும், இந்த நூற்றுண்டில் காஞ்சிபெற்ற சிறப்புக்கு ஒரே காரணம் அண்ணாவைப் பெற்றெடுத்த பூமி அது என்பதுதான். உலகெங்கும் வாழும் ஆறு கோடிக்கு மேற்பட்ட திராவிடர்களின் ஈடிணையற்ற தலைவனாக விளங்கிய பேரறிஞர் அண்ணாவைப் பெற்றெடுத்தகாரணத்தால் தமிழ் நாட்டு நகரங்கள் அத்தனையையும்விட காஞ்சிபுரம் உயர்தனிச் சிறப்பைப் பெற்றுவிட்டது.

அண்ணா பிறந்த ஊரை நோக்கி நம்முடைய கார் சென்றுகொண்டிருந்த அதே சமயம் என் உள்ளம் மேற்கண்டவாறு அந்த ஊரின் பெருமைகளைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

அண்ணா பிறந்த மண்ணுக்கு ஒரு முறை சென்று அம்மண்ணைத் தரிசிக்க வேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்தில் நீண்ட காலமாகவேயிருந்து வந்தது எனினும் அது கைகூடுவதாக இல்லை. 1970ம் ஆண்டு பெப்ரவரியில் தளபதி அமிர்தலிங்கம் அவர்களுடன் தமிழகம் சென்றிருந்தபோதும் காஞ்சிக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்திடவில்லை. இந்தத்தடவை எனது எண்ணம், நிறைவேறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டதை எண்ணி எனது உள்ளம் குதூகலித்துக்கொண்டது.

வான்முட்டும் கோபுரங்களைக்கொண்ட ஆலயங்களும், வீதிகளின் இருமருங்கும் காணப்பட்ட வண்ண வண்ணச் சேலைகள் நிறைந்த புடவைக் கடைகளும், காஞ்சிக்குள் நாம் பிரவேசித்துவிட்டோமென்பதை சொல்லாமல் சொல்லிக்காட்டின. காஞ்சிபுரம் சேலைகளுக்கு குறிப்பாக பட்டாடைகளுக்கு பெயர் பெற்ற இடம் என்பதை நமது தாய்மார்கள் அறிவார்கள்.

காஞ்சி வரதராசப் பெருமாள் ஆலயத்தைக்கடந்து நமது கார் செல்கிறது. அண்ணா வீட்டுக்கு எப்படிப் போவது என்பதை விசாரித்தறிந்து அங்கு போய்ச்சேருகிறோம். நாம் அங்கு போய்ச் சேரும் போது காலை 11-30 மணி இருக்கும்.

அண்ணா பிறந்து, தவழ்ந்து, மழலைபேசி, ஓடி ஆடி விளையாடி வளர்ந்த இல்லம் அது. அந்த இல்லத்தில் எத்தனை அரசியல் மந்திராலோசனைகள் நடைபெற்றிருக்கும்! எத்தனை எழுச்சிமிகு எழுத்தோவியங்கள் தீட்டப்பட்டிருக்கும்!! அந்தப் புனிதமான இல்லத்துக்குள் நுழைகிறோம்.

வாசலில் பெயர்ப் பலகை கறுப்புச் சிவப்பு வண்ணத்தில் காணப்படுகிறது. அதில் C. N. ANNA DURAI—IN—OUT (சி. என். அண்ணாதுரை— உள்ளே—வெளியே) என்பதில் IN (உள்ளே) என்பது முற்றாக அகற்றப்பட்டு OUT (வெளியே) என்பது நிரந்தரமாகப் பொறிக்கப் பட்டிருந்தது.

ஆம், அண்ணா நிரந்தரமாக அந்த வீட்டை விட்டு மட்டுமல்ல — உலகத்தை விட்டே சென்று விட்டதை நினைவூட்டுவது போல இருந்த பெயர்ப்பலகையைப் பார்த்தபோது கண்கள் பனித்தன. ANNA DURUI — IN (அண்ணாதுரை உள்ளே) என்ற பெயர்ப்பலகை தொங்கிய காலத்தில் அந்த வீட்டுக்கு வந்து அண்ணாவுடன் அளவளாவிக்கலந்துபேசி மகிழும் வாய்ப்புக்கிட்டாமற்போன எனது துரதிஷ்டத்தை எண்ணி எண்ணி என்னையே நான் சபித்துக்கொண்டேன்.

உள்ளே நுழைகிறோம். அண்ணாவின் இரண்டாவது மருமகள் விஜயா இளங்கோவன் அகமும் முகமும் மலர 'வாங்க வாங்க' என்று எங்களை வரவேற்கிறார்.

'நாங்கள் இலங்கையிலிருந்து வருகிறோம். (தந்தையைக் காட்டி) இவர்தான் எங்கள் ஈழத்தமிழ் நாட்டின் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள். அண்ணா பிறந்து வளர்ந்த இந்த வீட்டுக்கு வரவேண்டுமென்று ஆவலோடு வந்திருக்கிறோம்.' — இப்படிக் கூறினார் அண்ணன் அமிர்தலிங்கம்.

'தெரியும்—நீங்கள் வருகிறீர்கள் என்று ஜனார்த்தனம் இசென்னையிலிருந்து டெலிபோனில் கூறியிருந்தார். நீங்கள் எல்லாம் இங்கு வருவதற்கு நாங்கள் கொடுத்து வச்சிருக்கணும். மாமா (அண்ணா அவர்கள்) பெரியவர் செல்வநாயகம் மீது மிகுந்த மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தார். மாமா மரியாதை வைத்திருந்த இலங்கைத் தமிழர் தலைவர் இங்கு வந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.'

—இவ்வாறு கூறிக்கொண்டே எம்மை உள்ளே அழைத்துச் சென்றார் திருமதி விஜயா இளங்கோவன்.

அமைதி, அடக்கம், அறிவு, அழகு போன்ற அத்தனை பண்புகளினதும் உறைவிடமாக காட்சியளித்தார் விஜயா. அண்ணாவின் அன்புக்குரிய மருமகள் அல்லவா அவர்!

விஜயாவிடம் பேச்சு ஆற்றலும், எழுத்து ஆற்றலும் கூட இருந்தது. 'காஞ்சி' ஏட்டில் விஜயா எழுதிய சில கட்டுரைகளைப் படித்திருக்கிறேன். அண்ணா, கருணாநிதி, போன்றவர்களுக்கு முன்னாலேயே கூட்டங்களில் பேசி சபாஷ் வாங்கியவர் விஜயா என்பதும் நான் அறிவேன்.

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்று சொல்லப்படும்போது அண்ணாவின் மருமகளுக்கு இந்த ஆற்றல்கள் இருப்பதில் ஆச்சரியப்படத்தான் என்ன இருக்கிறது?

அண்ணாவைப் பெற்றெடுத்த அன்னையார் திருமதி பங்காரு அம்மாள் ஆங்கோர் ஓரத்தில் படுத்திருந்தார். தமிழ் நாட்டு மக்களின் அறிவுக் கண்களை திறந்து விட்ட அண்ணாவைப் பெற்றெடுத்த அந்த மூதாட்டி தன்பார்வையை இழந்து இருந்தார்.

திருமதி விஜயா, பங்காரு அம்மாளின் அருகில் சென்று 'பாட்டி சிலோனிலிருந்து தமிழர் தலைவர் செல்வநாயகம் வந்திருக்கிறார்' என்று கூறியதும் தனது இயலாமையையும் பொருட்படுத்தாது எழுந்து உட்கார்ந்து வரவேற்றார் அந்த மூதாட்டி!

'அவன் (அண்ணா) இருக்கும் போது சிலோன் தமிழரைப் பற்றித்தான் சொல்லிச் சொல்லி கவலைப்படுவான். சிங்களவர் கொடுமை இப்போதும் உண்டோ என்று கேட்கிறார் அண்ணாவின் அன்னையார்! ஆம், அண்ணாவுக்கு வீரத்தையூட்டிய தமிழ்உள்ளமல்லவா அந்தத் தாயின் உள்ளம்!

'அண்ணாவை இலங்கைக்கு ஒரு முறை அழைத்து விடுவதற்கு எவ்வளவோ சிரமப் பட்டோம். ஆனால் இரு நாட்டு அரசாங்கங்களின தும் கெடுபிடிகள் காரணமாக இலங்கைக்கு அண்ணா வரமுடியாமலே போய் விட்டது. இலங்கைக்கு வராமலே அண்ணா மறைந்து விட்டார்.'— கண்களில் வழிந்த நீரைக் கைக் குட்டையால் துடைத்தபடி இவ்வாறு கூறினார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்.

'ஆமா, இலங்கைக்கு வர முடியாமலே மாமா போயிட்டார். ஆனால் மலேயா, சிங்கப்பூர் எல்லாம் போயிருந்தார். காலையிலே கூட மலேசியாவிலிருந்து தமிழர்கள் சிலர் இங்கு வீட்டுக்கு வந்து இருந்தார்கள்' என்கிறார். விஜயா.

இப்படிக் கூறிய அவர் எதிரே கிடந்த ஒரு சாய்வு நாற்காலியைச் சுட்டிக் காட்டி 'அந்த நாற்காலியிலே தான் உட்கார்ந்தபடி வாயிலே வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு வீட்டுக்குத் தம்மைக் காணவருவோரிடம் அண்ணா வழமையாகப் பேசிக்கொண்டிருப்பார்' என்று கம்மிய குரலில் கூறுகிறார்.

அண்ணா வழமையாக உட்காரும் அந்தச் சாய்வு நாற்காலியில் அப்போது தந்தை செல்வா உட்கார்ந்திருந்தார்.

விஜயா தொடர்ந்தார்:— 'மாமா இருக்கும்போது அவரைத் தேடி நாள் தோறும் எவ்வளவு பேரு வருவாங்க-அவரிடம் எவ்வளவு உதவி பெற்றிருக்காங்க. ஆனா இன்ன யார் கவனிக்கிறாங்க? மாமா இல்லாதது தெய்வம் இல்லாக் கோவில் போலாகிவிட்டது...'

திருமதி விஜயா கூறியவற்றிலிருந்து பல விஷயங்களை என்னால் ஊகிக்க முடிந்தது. அண்ணா இறக்கும் போது பதினேழாயிரம் ரூபா கடன்வைத்து விட்டுச் சென்றதாக இலட்சிய நடிகர் இராசேந்திரன் கூறியிருந்ததும் என் நினைவுக்கு வந்தது, ஒரு நீண்ட பெருமூச்சு ஒன்று என்னையறியாமலே எனக்கு ஏற்பட்டது.

'ஆமாம், அண்ணியார் எங்கே?'

'இராமநாதபுர மாவட்டத்திலே ஒரு பொதுக் கூட்டம் அதுக்கு போயிருக்கிறாங்க. நீங்க தமிழ் நாட்டை விட்டு கிளம்பறதுக்கு முந்தி மாமியை உங்களை ஒரு தரம் அவசியம் பார்க்க சொல்கிறேன்.'

'வேண்டாம்—அவர் வந்ததும் சென்னையில் நாங்களே சென்று பார்க்கிறோம்.'

இதைத் தொடர்ந்து 'காஞ்சி' பத்திரிகை பற்றியும் அண்ணாவின் நூல்களைப் பற்றியும் பேச்சுத் திரும்பியது. அண்ணா நடத்தி வந்த காஞ்சிப் பத்திரிகையை இப்போழுது தனது கணவரும் தானுமாக நடத்துவதாக கூறிய விஜயா, சுதந்திரன் பத்திரிகை ஒழுங்காக கிடைத்து வருவதாகவும், அதன் மூலமே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ள முடிவதாகவும் கூறினார்.

'மாமா (அண்ணா) சுதந்திரன் பத்திரிகையை தவறவிடாது கவனத்துடன் படிப்பதைக் கண்டிருக்கிறேன்" என்றார் அவர்.

அண்ணாவின் நூல்களை தொகுப்புக்களாக இப்போது வெளியிட்டு வரும் பணியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும், 'அண்ணாவின் சிறுகதைகள்' முதலாவது தொகுப்பாகவும், அண்ணாவின் நாடகங்கள்' இரண்டாவது தொகுப்பாகவும்வெளிவந்துவிட்டனவென்றும் மூன்றாவது தொகுப்பாக அண்ணா தம்பிக்குஎழுதியகடிதங்களை வெளியிட முயற்சிகள் நடப்பதாகவும் திருமதி விஜயா தெரிவித்தார். சில நூற்களை தந்தை செல்வாவுக்கும் எமக்கும் அன்பளிப்பாக உவந்தளித்தார்.

''நல்லது — அண்ணாவின் வீட்டுக்கு வந்து உங்களையெல்லாம் பார்த்து பேசியது எமக்கு மகிழ்ச்சி— சென்று வருகிறோம்.'' —விடைபெற்றுக்கொள்ளுகிறோம் நாம்.

உள்ளே சென்று திரும்பிய விஜயா, அண்ணாவின் அருமைப்பேத்தியும் தனது மகளுமான கன்மணி மூலம் காஞ்சிபுரத்துப் பட்டாடை ஒன்றைக் செல்வாவுக்கு போர்த்தி மகிழ்ந்தார். மஞ்சளும், பட்டுத்துண்டும் குங்குமமும், திருமதி மங்கையர்க்கரசியிடம் கொடுத்து பாசத்துடன் விடைதந்தார்.

''மாமா இருந்து, நீங்கள் வந்திருந்தால் இன்னும் சிறப்பாக உங்களை உபசரித்திருப்போம்...'' என்று கூறிய திருமதி விஜயாவிடம்,'' நீங்கள் இவ்வளவு தூரம் எங்களை உபசரித்ததற்கே நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்'' என்று கூறி விடைபெற்றோம்.

''பாட்டீ, போய் வருகிறோம்—'' இப்படி அண்ணாவின் அன்னையிடம் நாம் கூறியபோது 'சென்று வாருங்கள் பேரர்களே" என்று விடைதந்தார் அந்த மூதாட்டி.

வீட்டிலிருந்து வெளியே வருகிறோம். அண்ணா தனது கட்டுரைகளில் அடிக்கடி குறிப்பிடும் 'ஈழத்து அடிகளின்' நினைவு எனக்கு வருகிறது. அவரைப்பார்க்க வேண்டும் என்ற ஆவல் உந்துகிறது. ஈழத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு சென்று ஈழத்தடிகளைக் காணாமல் திரும்புவதா? அவர் நமது நாட்டவரல்லவா?

யார் இந்த ஈழத்து அடிகள்?

—தொடரும்.

---

## சிதம்பரா கல்லூரி மாணவர்களுக்குப் பிணை!

வல்வையில் உள்ள அரசாங்க ஆதரவாளர் ஒருவரது வீட்டில் பறக்கவிடப்பட்டிருந்த தேசியக் கொடியை அப்புறப்படுத்தியதாக வல்வை பொலிசாரினால் தொடரப்பட்டிருந்த வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபர்களான சிதம்பராக்கல்லூரி மாணவர்கள். எஸ். பாலசுப்பிரமணியம், எஸ். மனோகரன் எஸ். ஜி. சிவானந்தன் ஆகிய மூவரையும் தலா ரூபா 200 பிணையில் செல்ல நீதவான் அனுமதித்து விசாரணையை ஆகஸ்ட் 17ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சிலோன் என்டடெயின்மென்ட்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கிறது



## 100வது நாள் சென்ட்ரல்

(மருதானை)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா பாலாஜி,
சந்திரபாபு, சுந்தரராஜன், ரங்கராவ்,
நாகையா, ராகவன், பண்டரிபாய், மனோகர்

நடிக்கும்
சுஜாதாவின்

# ராஜா

(ஈஸ்மன் கலர்)

---



## 5வது வெற்றி வாரம்

கெப்பிட்டல்—பிளாசா
(கொழும்பு) (வெள்ளவத்தை)

வெலிங்டன் - லிடோ
(யாழ்நகர்) (யாழ்நகர்)

## சிவாஜிகணேசன் ஜெயலலிதா

(இணைந்து நடித்த முதல் வண்ணப்படம்)

பாலாஜி, நிர்மலா, சோ, தேங்காய் சீனிவாசன்,
லட்சுமி, குழந்தை நட்சத்திரம் மாஸ்டர் பிரபாகர்
உட்பட பன்னிருவர் நடித்த

ஜெயார் மூவீஸ்



# எங்கமாமா

(ஈஸ்மன் கலர்)

## விரைவில் சினிமாஸ் திரைகளில் எதிர்பாருங்கள்

முக்தா பிலிம்ஸ்



# அருணோதயம்

---

## 4வது வாரமாக காட்சியளிக்கிறது

கொழும்பில் கடைசித் தடவையாக

# செல்லமகால்

## சிவாஜிகணேசன் - சாவித்திரி

கே. பி. சுந்தராம்பாள்-டி. ஆர். மகாலிங்கம்
நாகேஷ் நடித்த

ஏ. பி. நாகராஜனின் வண்ணப்படம்

# திருவிளையாடல்

## 2வது மாதம்

கெயிட்டி
(கொழும்பு)

கே. ஆர். விஜயா
ரவிச்சந்திரன்—நாகேஷ்
ரி. கே. பகவதி—நடித்த



சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] பண்டாரநாயக்கா [illegible] இலக்கத்தில்
1972ம் வருடம் ஜூலை மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org